பக்கங்கள்: பதினாறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 11 சனிக்கிழமை (25.03.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :118

### அன்னை பூபதி நினைவு தின அனுஷ்டானத்தைத் தடுக்க

# யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்குள் சீருடையினர் புகுந்து கண்டபடி தாக்குதல்!



யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்.பலாலி வீதியில் - திருநெல்வேலிச் சந்திக்குச் சமீபமாக உள்ள உயர் தொழில் நுட்ப நிறுவனத்துக்குள் புகுந்த சீருடையினர் நிறுவனத்துக்குச் சொந்தமான சொத்துக்களை அடித்துச் சேதப்படுத்தியதுடன் அங்கிருந்த மாணவர்களையும் கண்டபடி தாக்கினர் எனக்கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 10 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

தியாக தீபம் அன்னை பூபதியின் 18 ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் கடந்த சில தினங்களாக உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் இடம் பெற்று வந்தன.

இவ்வாறான நினைவு தின நிகழ்வுகளை ஒழுங்கு செய்ய வேண்டாம் என்று படைத்தரப்பு நிறுவனத்துக்குள் புகுந்து அறிவுறுத்தியிருந்த நிலையிலும் மாணவர்கள் அன்னை பூபதியின் நினைவு தின நிகழ்வுகளை தொடர்ச்சியாக ஒழுங்கு படுத்தி வந்தனர்.

இதனால், மாணவர்களுக்கும் சீருடையினருக்கும் இடையில் கடந்த சில தினங்களாக முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்றுக் காலை 8 மணியளவில் தியாக தீபம் அன்னை பூபதியின் நினைவுதின நிகழ்வு மாணவர்களால் அனுஷ்டிக்கப்பட்டதுடன், தமிழீழ தேசியக் கொடியும் ஏற்றப்பட்டது.

இதனையறிந்த சீருடையினர் முகத்தை கறுப்புத் துணியி

(16ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பு மாநகர சபைத் தேர்தலுக்கான

# ஐ.தே.க. வேட்புமனு நிராகரிப்பு சரியானது என நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, மார்ச் 25

**கொழும்பு மாநகர சபைக்கான தேர்தலுக்காக ஐக்கிய தேசியக் கட்சியினால் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுவை நிராகரிப்பதற்கு தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் எடுத்த முடிவுசட்டபூர்வமானதென்று மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்திருக்கிறது.**

**இதன்படி மேற்படி வேட்பு மனு நிராகரிப்பிற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி தாக்கல் செய்த 'ரிட்' மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.**

கொழும்பு மாநகரசபைக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து ஐ.தே.க. செயலாளர் என்.வி.கே.கே. வேரகொட கடந்த மாதம் 21ஆம் திகதி தாக்கல் செய்திருந்த ரிட் மனு மீதான தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான கே.ஸ்ரீபவன், சிசிர டி ஆப்ரூ ஆகியோர் முன்னிலையில் இது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

(16ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு புதூர் பகுதியில் இரண்டு கைக்குண்டுகள் மீட்பு

காத்தான்குடி, மார்ச் 25

மட்டக்களப்பு மாநகரசபைப் பிரதேசத் திற்குட்பட்ட புதூர் பகுதி வீடொன்றிலிருந்து இரண்டு சக்தி வாய்ந்த குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

புதூர், திமிலைதீவு வீதியில் அமைக்கப் பட்டுவரும் வீடொன்றிலிருந்து, இக்குண்டுகள் பொலீஸாரினால் மீட்கப்பட்டன. நேற்று மாலை குண்டு செயலிழக்கச் செய்யும் படையி

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் கொடி ஏற்றுவது மீறலாகும்

### கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர்

கொழும்பு, மார்ச் 25

''உயர்தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்தில் நாம் பிரசன்னமாகி இருந்ததனால் அங்கு ஏற்பட இருந்த பெரும் பதற்ற நிலைமையை எம்மால் தவிர்க்க முடிந்தது.''

- இவ்வாறு தெரிவித்தார் இலங்கை கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் கொலஸ்தோதிர்.

யாழ். உயர்தொழில்நுட்பக் கல்லூரியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக பி.பி.ஸி. தமிழோசைக்கு நேற்றிரவு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறிய

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஒடுக்குமுறைகளை இனியும் பொறுக்கமாட்டோம்!

### அரசியல் கருத்தரங்கில் தமிழ்ச்செல்வன்

மன்னார்,மார்ச்25

அரசின் ஒடுக்குமுறைகளை இனியும் தமிழீழ விடுதலைப் புலிகள் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

மன்னார் ஆண்டாங்குளம் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையின் பிரதேச மக்களுக்கான சமகால அரசியல் கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கடந்த நான்கு ஆண்டுகளாக நாம் சமாதானப் பேச்சுகளில் பொறுமையுடன் ஈடுபட்டு வந்தோம்.

சமாதானத்தின் மூலம் போரை முடிவுக்

(16ஆம் பக்கம் பார்க்க)

# உதிரி விவகாரங்களைப் பேசி காலத்தை இழுத்தடிக்காமல் அடிப்படைப் பிரச்சினைத் தீர்வு பற்றி விவாதியுங்கள்!



### அரசுக்கும் புலிகளுக்கும் இராணுவத் தளபதி உபதேசம்

கொழும்பு, மார்ச் 25

''விடுதலைப் புலிகளும் அரசும் அவசியமற்ற விடயங்களைப் பேசுவதை விடுத்து, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அடிப்படை விடயங்கள் - முக்கிய பிரச்சினைகள் - குறித்து அடுத்த சுற்றுப் பேச்சில் விரைந்து பேசுவதற்கு முன்வரவேண்டும்''

- இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா இவ்வாறு கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

நேற்று கொழும்பில் இராணுவத் தலைமையகத்தில் இலங்கை இராணுவத்தின் இணையத்தளத்தை மேம்பாடு செய்து ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொ[illegible]டு உரையாற்றிய பின்னர் செய்தியாளர்களிடம் தனிப்பட்ட முறையில் உரையாடிய போது அவர் இவ்வாறு கூறினார்.

''நான்கு வருட யுத்தத்தால் மக்களுக்கு எவ்வித பயனும் இல்லை. உதிரி விடயங்களைப் பேசிக்கொண்டிருந்தால், காலம் இப்படியே இழுத்தடித்துச் செல்லப்படும். வேறொன்றும் நடக்காது. ஆகவே, அடிப்படை விடயங்கள் குறித்து விரைந்து பேசவும் அதன்மூலம் மக்களுக்குப் பயனளிக்கும் பெறுபேறுகளை எட்டவும் புலிகளும் அரசும் முன்வரவேண்டும்.

''யுத்தநிறுத்த உடன்பாட்டில் பல அடிப்படைத்தவறுகள்

(15ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



யாழ்.தொழில்நுட்ப நிறுவனத்தினுள் நேற்று சீருடையினர் புகுந்து நடத்திய தாக்குதல்களின் போது அங்கு சேதப்படுத்தப்பட்ட கூரை சீலிங்குகள் மற்றும் ஜன்னல்களைப் படங்களில் காணலாம். (ஐ)

# சோதனைச் சாவடி மீது தாக்குதல்: புலி உறுப்பினர் பலி; இருவர் காயம்

## திருமலை மகிந்தபுரம் பகுதியில் சம்பவம்

திருமலை, மார்ச் 25

திருகோணமலை மகிந்தபுரம் பகுதியில் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது இராணுவத்தினர் நடத்தியதாகக் கூறப்படும் மோட்டார் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் உறுப்பினரொருவர் கொல்லப்பட்டதுடன் இருவர் படுகாயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் இரவு 7.30மணியளவில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடி மீது தாக்குதல் நடத்திய இராணுவத்தினர் மகிந்தபுர இராணுவ முகாமிற்கு தப்பியோடினர் எனப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

யுத்த சூனிய பிரதேசத்தை அண்டி இடம்பெற்ற இந்தத் தாக்குதல் குறித்து இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் தாங்கள் முறையிட்டிருக்கின்றனர் எனப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்துள்ளார். (ஐ-க)

### நிர்வாகசேவைப் பரீட்சைக்கு தோற்றுவோருக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச்25

இலங்கை நிர்வாகசேவையின் வகுப்பு II இன் தரம் II இற்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கு அரச சேவைப் பட்டதாரிகள் சங்கம் வழிகாட்டல் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்துள்ளது.

இந்தக் கருத்தரங்கில் விடய ஆய்வு, நுண்அறிவு, கிரகித்தல் ஆகிய பாடங்கள் குறித்து வழிகாட்டல்கள் வழங்கப்படும் என்றும் -

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இந்தக் கருத்தரங்குகள் நடைபெறும் என்றும் - சங்கத் தலைவர் கு.பற்குணராசா அறிவித்துள்ளார். (எ)

### இரு வவுனியா வாசிகள் நோர்வூட்டில் கைது

நோர்வூட், மார்ச் 25

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரண்டு தமிழர்களை நோர்வூட் பொலீஸார் நேற்றுமுன்தினமிரவு கைது செய்திருக்கின்றனர்.

வவுனியாவைச் சேர்ந்த இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர். வவுனியாவிலுள்ள அரிசி ஆலை ஒன்றிற்கு வேலையாள்களைக் கூட்டிச் செல்வதற்காக மலையகத்துக்கு வந்து இவர்கள் தங்கியிருந்தபோதே கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

நோர்வூட் பொலீஸார் இவர்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

### புராண படனப் போட்டிகள்

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் மாணவர்களிடையே வருடந்தோறும் நடத்தி வரும் புராண படனப் போட்டிகள் எதிர்வரும் 9ஆம் திகதி காலை 9 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தரம் 10, 11, 12, 13 வகுப்புகளைச் சேர்ந்த ஆண், பெண் இருபாலருக்கும் இந்தப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டியில் பங்குபற்றுவதற்கு பாடசாலை ஒன்றிலிருந்து இரு ஆண்களும் இரு பெண்களுமாக விண்ணப்பிக்க முடியும்.

போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் 'சைவப் புலவர் செ.கந்தசத்தியதாசன், சைவப்பிரகாச அமைச்சர், முருகன்திடல், புத்தூர் கிழக்கு, புத்தூர்' என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-203)

# கிழக்கு முஸ்லிம் மக்கள் நேற்று பல இடங்களிலும் ஆர்ப்பாட்டம்

## இஸ்லாமிய ஆயுதக் குழுக்கள் இயங்குவதான குற்றச்சாட்டை ஆட்சேபித்து

காத்தான்குடி, மார்ச் 25

கிழக்கு மாகாண முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் தொழுகையின் பின்னர் பரவலாகப் பல இடங்களிலும் ஆர்ப்பாட்டங்களும், மறியற்போராட்டங்களும் இடம்பெற்றன.

கிழக்கு முஸ்லிம் பகுதிகளில் ஜிஹாத் இஸ்லாமிய ஆயுதக்குழு செயற்பட்டுவருகின்றது எனப் 'பவ்ரல்' அமைப்புத் தலைவர் மற்றும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் தெரிவித்த கருத்துகளுக்கு ஆட்சேபனை தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று ஜும்ஆத் தொழுகையின் பின்னர் பல ஆர்ப்பாட்டங்களும், கண்டனக் கூட்டங்களும் இடம்பெற்றன. காத்தான்குடியில் 'நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம்' ஒழுங்கு செய்த இரு ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் ஜாமி யுழ்ழாபிரின் ஜும்ஆப் பள்ளிவாசல், யதுரியா ஜும்ஆப் பள்ளிவாசல் ஆகியவற்றில் ஆரம்பித்து, பிரதேச செயலக முன்றிலை வந்தடைந்தன.

மட்டக்களப்பு உட்பட ஆறுமாவட்டங்களில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இந்த ஆர்பாட்டங்களில் கோஷங்கள் எழுப்பப்பட்டன. (ஐ-க)

### மணற்காட்டில் கைதான இளைஞர் விடுவிப்பு

கரவெட்டி,மார்ச்25

குடத்தனைப் பகுதியில் நலன்புரி முகாம் ஒன்றில் வைத்துக் கடந்த புதனன்று இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட இளைஞர் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டார்.

அன்ரன் விஜயகுமார் (வயது 22) என்ற இந்த இளைஞர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிவான் க.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

ஒரு குடும்பஸ்தரான இந்த இளைஞர் குடத்தனை ஆறாம் கட்டைப் பகுதியில் இராணுவ நிலை ஒன்றின் மீது கடந்த புதனன்று நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் பின் அப்பகுதியில் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்திய படையினரால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இவரது கைது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கிட்டினன் சிவநேசன் மற்றும் கரவெட்டி, மணற்காடு பங்குத் தந்தையர்கள் உடனடி நடவடிக்கைகளை எடுத்திருந்தனர். இதனையடுத்தே இளைஞர் விடுவிக்கப்பட்டிருக்கிறார். (ஐ-70-173)

# 'அழகெழல்' போட்டி நேற்று ஆரம்பம் ஆயிரத்து 400 மாணவர் பங்கேற்றனர்

## இன்றும் போட்டிகள் தொடர்ந்து நடக்கும்

யாழ்ப்பாணம்,மார்ச்25

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் நுண்கலைத்துறையினர் வருடந்தோறும் நடத்திவரும் 'அழகெழல்' போட்டிகள் நேற்று ஆரம்பமாகின.

நேற்று நடைபெற்ற முதலாம் நாள் போட்டிகளில் சுமார் 85 பாடசாலைகளைச் சேர்ந்த ஆயிரத்து 400 மாணவர்கள் பங்குபற்றினர். இந்த நிகழ்வுகளில் தென்மராட்சி வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கைலாசநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

முதலாம் நாளான நேற்று ஓவியப் போட்டி, நாடகப் போட்டி என்பன நடத்தப்பட்டன. இரண்டாம் நாளான இன்றும் நடனம், இசைப் போட்டிகள் நடைபெறும். இன்றைய நிகழ்வுகளில் இலங்கை வங்கி யாழ்.மேற்றரக் கிளையின் பிரதம முகாமை[illegible]ளர் எஸ்.சிவரட்ணம் முதன்மை விருந்தி[illegible]ராகக் கலந்துகொள்வார் என்று அழகெழல் போட்டியின் ஒழுங்கமைப்பாளர் கல்வியியலாளர் எஸ்.ரட்ணேஸ்வரன் தெரிவித்தார். (எ)

# ஸ்கந்தா - மகாஜனா துடுப்பாட்டம் நேற்று விறுவிறுப்பாக ஆரம்பம்!

வலி.வடக்கு,மார்ச்25

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும் இடையே வருடாந்தம் நடத்தப்படும் 'நாயகர்களின் போர்' (Battle of the Heroses)துடுப்பாட்டப் போட்டி ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நேற்று ஆரம்பமாகியது.

நண்பகல் ஒரு மணிக்கு அணிகள் களம் இறங்கின. பூவா தலையா போட்டு வெற்றியீட்டிய ஸ்கந்தா அணி மகாஜனா அணியை துடுப்பெடுத்தாட அழைத்தது.

மகாஜனாக் கல்லூரி அணி நேற்றைய தினம் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 145 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

மகாஜனாக் கல்லூரியின் சார்பில் பிரகலாதன் 50 ஓட்டங்களையும் மயூரன் 26 ஓட்டங்களையும் ஆகக் கூடிய ஓட்டங்களாகப் பெற்றுக் கொடுத்தனர்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி சார்பில் பந்து வீசிய நிரோஜன் 46 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் நிசாகரன் 32 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆட்டநேர முடிவில் 25 ஓட்டங்களுக்கு ஒரு வி[illegible]க்கெட்டை இழந்த நிலையில் ஆட்டம் நிறு[illegible]ப்பட்டது.

இதேநேரம் ஆட்டமிழக்காமல் நிசாகரன் 14 ஓட்டங்களுடனும் ஜெயன் 02 ஓட்டங்களுடனும் இருக்கின்றார்கள்.

இன்று காலை 9 மணிக்கு ஆட்டம் மீண்டும் ஆரம்பமாகும்.

'உதயன் - சுடர் ஒளி' நிறுவனங்கள் மற்றும் செலான் வங்கி என்பவற்றின் அனுசரனையுடன் இந்தத் துடுப்பாட்டப் போட்டி நடைபெறுகிறது. (ஐ-86)

### கல்வியங்காட்டில் கடை உடைத்து தொலைபேசிகள் திருட்டு

நல்லூர் பொதுச் சந்தைப் பகுதியில் உள்ள தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றை உடைத்து நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பொருள்கள் பலவற்றை அபகரித்திருக்கின்றனர்.

ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள இந்த வர்த்தக நிலையத்தில் இருந்து சுமார் 60 ஆயிரம் ரூபா மதிப்புள்ள தொலைபேசிகள், பற்றறிகள் என்பன திருடப்பட்டிருக்கின்றன என்று முறையிடப்பட்டிருக்கிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இந்த திருட்டு இடம்பெற்றுள்ளது.

இதேவேளை -அன்று இரவு சட்டநாதர் சிவன் ஆலயத்தின் உண்டியலும் உடைக்கப்பட்டு காணிக்கைப் பணம் திருடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நல்லூர் மற்றும் கல்வியங்காடு [illegible]திகளில் அண்மைக் காலத்தில் தொடர்ச்சியாக திருட்டுகள் இடம்பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-180)

## ஸ்கந்தா - மகாஜனா மோதல்



மைதானம் நோக்கி வீரர்கள் வருகை...




புதிய 'ஸ்கோர் போட்' திரை நீக்கம்...



வீரர்கள் அறிமுகம்...



ஆட்டத்தில் ஒரு கட்டம்... (படங்கள்:நேசன்)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# தெற்கு நிலைமைக்காக காத்திருந்தால் அரசுத் தரப்புக்குக் காலம் கடந்துவிடும்

தென்னிலங்கையில் அரசியல் கள நிலைவரங்களில் பல்வேறு மாற்றங்களுக்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

இதுவரை இலங்கையின் புதிய ஜனாதிபதி மஹிந்தரோடு அணி கட்டி நின்ற ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்ற சிங்கள இனவாதக் கட்சிகள் இப்போது ஜனாதிபதியுடன் முறுகத் தொடங்கியுள்ளன. அவரிடமிருந்து விலக அவை தயாராகி வருகின்றன.

ஜனாதிபதிக்கு எதிரான தரப்பில் நின்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்றவை வழமை போல ஆட்சி அதிகாரத்தை சேவிக்கும் தமது பண்பை - போக்கை - கைங்கரியத்தை - வெளிப்படுத்தத் தொடங்கி விட்டன.

புதிய ஜனாதிபதித் தெரிவுக்குப் பின்னரும் கூட அவரோடு முரண்டுபிடித்துக் கொண்டு நின்ற - அவரது கட்சியைச் சேர்ந்த - முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, சந்திரிகாவின் சகோதரர் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க போன்றோர் ஜனாதிபதி மஹிந்தருக்கு இப்போது சாமரம் வீசத் தொடங்கி விட்டனர்.

இப்படி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கைகளில் அதிகார, அரசியல் வலு பலமடைந்து வருகையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிய்ச்சல் - பிடுங்கல் உச்சக் கட்டத்தை எட்டியிருக்கின்றது. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை அப்பொறுப்பிலிருந்து கவிழ்த்துவிட்டு தலைமையைக் கைப்பற்றும் முயற்சி, அடுத்த மட்டத் தலைவர்களால் முனைப்பாக முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது என்று தெரிகின்றது. ஏற்கனவே கட்சியின் மூத்த தலைவர்கள் பலர் பதவி ஆசை கருதி ஆளும் தரப்பை நோக்கிக் குத்துக்கரணம் அடித்து வருவதால் கட்சிக்குள் செல்வாக்கிழந்து வருகிறார் ரணில். அவரது தலைமை யைக் கவிழ்க்கும் திட்டம் கட்சிக்குள் மும்முரமாக முன்னெடுக்கப்படும் இந்தச் சமயத்தில்தான் அவரது 57 ஆவது பிறந்த தினமான நேற்று கொழும்பு மாநகர சபைக்கு அவரது கட்சி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுவை தெரிவத்தாட்சி அலுவலர் நிராகரித்தமை சரியே என்ற பேரிடி தரும் நீதிமன்றத் தீர்ப்பு பிறந்த நாள் பரிசாக அவருக்குக் கிடைத்திருக்கின்றது.

கொழும்பு மாநகரசபை மூலம் கடந்த ஐந்து தசாப்த காலமாக தலைநகரில் அசைக்க முடியாத செல்வாக்கைச் செலுத்தி வந்த ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்கால வலிமை இத்தீர்ப்பின் மூலம் அங்கு தள்ளாடும் நிலைக்குள்ளாகியிருக்கின்றது.

இவ்வாறு தென்னிலங்கையில் ஆளும் தரப்பினதும் அதன் தலைவரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினதும் அதிகார வலு ஓங்கி வரும் நிலையில்தான் -

இலங்கையில் மீண்டும் யுத்த சூழ்நிலை உருவாகி வருகின்றது என்ற உண்மையை வெளிப்படையாகத் தெரிவித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

தென்னிலங்கையில் தனது அதிகார - அரசியல்-வலுவையும் செல்வாக்கையும் பலப்படுத்திக் கொள்வதில் அதிக ஈடுபாடு காட்டும் ஜனாதிபதி மஹிந்த, மறுபுறம் அமைதி முயற்சிகளை ஆக்கபூர்வமான திசையில் முன்னகர்த்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்காமல் இழுத்தடிக்கிறார். அதனால் நிலைமை மோசமாகி, விபரீத எல்லையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது என்பதையே கஜேந்திரகுமார் எம்.பி. ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டி தெளிவுபடுத்துகின்றது.

தென்னிலங்கையில் அரசியல் ரீதியாகத் தன்னைப் பலப்படுத்திய பின்னர், அமைதி முயற்சிகளை ஆக்கபூர்வமான திசையில் நகர்த்து வது குறித்து சிந்திக்கலாம் எனத் திட்டமிடுகின்றார் போலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

ஆனால், தற்போதைய அமைதி முயற்சிகள் விவகாரத்தில் ஏற்கனவே சுமார் நாலரை ஆண்டு காலத் தாம தம் கடந்துவிட்டது. இனிமேலும் அமைதி முயற்சிகள் என்ற பெயரில் காலத்தை இழுத்தடித்து, தமிழர் தரப்பை ஏமாற்றும் கபடப் போக்குக்கு எடுபட்டு, அந்தரித்து, அல்லாடிப்போய் நடுவீதியில் நிற்பதற்கு தமிழர் தலைவர்கள் ஒன்றும் ஏமாளிகள் அல்லர். அதற்குத் தமிழர் தலைமை தயாரில்லை.

ஆகவே, காலம் கடக்க முன்னர் அமைதி முயற்சிகளை முன்னேற்று வதற்கான - உருப்படியான - நகர்வுகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு களத்தில் காட்டவேண்டும். சொல்லிலும் செயலிலும் அது தெளிவாக வெளிப்படுத்தப்படவும் வேண்டும்.

இல்லையேல் -

தென்னிலங்கையில் தமது அரசியல் பலம் பழுத்து, கனிந்து தம் கைகளில் விழும்வரை ஜனாதிபதி காத்திருக்க, மறுபுறத்தில் களத்தில் அமைதி முயற்சிகள் காலாவதியாகி, சமாதான எத்தனங்கள் குழம்பி, கொடூரப் போர் மீண்டும் வெடித்துவிடும்.

அதன் பின்னர் அதைத் தடுக்க முயற்சிப்பது 'குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடிய' கதையாகி விடும்.

ஆகையால், தென்னிலங்கையில் தமது அரசியல் பலத்துக்காக சிரத்தை கொள்ளும் ஜனாதிபதி மஹிந்தர், அமைதித் தீர்வு முயற்சிகளின் பக்கமும் தமது கவனத்தை சற்று அவசரமாகத் திருப்புவது நல்லது.

# முள்முருக்கம் மரங்களில் திடீர் நோய் பீதியால் வெட்டி அழிக்கின்றனர் மக்கள்

## ஆழிப் பேரலையின் பின் பரவிய பூச்சியின் தாக்கமா?

யாழ்ப்பாணம்,மார்ச்25

குடாநாட்டில் பரவலாகக் காணப்படும் முள்முருக்க மரங்களில் ஒருவித நோய் பரவிவருகின்றது. இந்த நோய் தொடர்பாக மக்கள் மத்தியில் பல்வேறு ஊகங்கள் எழுந்துள்ளதால் முள்முருக்க மரங்கள் கண்டபடி வெட்டி அழிக்கப்பட்டு வருகின்றன.

கால்நடைத் தீவனம் மற்றும் கதிகால் பயன்பாடு கருதி முள்முருக்க மரங்களைக் குடாநாட்டு மக்கள் விரும்பி வளர்க்கின்றனர்.

அண்மைக்காலமாக முள்முருக்க மரங்களின் குருத்து மற்றும் மென் தண்டுப் பகுதிகளில் நோய் தொற்றி அவை பருத்து வீங்கிச் செல்வது அவதானிக்கப்பட்டுள்ளது.

திடீரென குருத்துப் பகுதிகள் புடைத்து விகாரமான தோற்றம் பெறுவதால் இந்நோய் குறித்து மக்கள் மத்தியில் அச்சம் காணப்படுகிறது. நுளம்பு மூலம் இந்த நோய் ஏற்பட்டிருக்கிறது என்ற ஊகங்கள் மக்களைப் பீதிக்குள்ளாக்கி இருப்பதால் பலரும் தங்கள் வீடுகளிலுள்ள முள்முருக்க மரங்களை வெட்டி அழித்து வருகின்றனர்.

முள்முருக்க மரங்களின் குருத்துப் பகுதி புடைத்து வீங்கும் தன்மை 'யானைக்கால்' நோய் போன்று தென்படுவதால் இது நுளம்பினால் பரப்பப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் பலரிடையே காணப்படுகின்றது.

ஆனால், இந்நோய் முடிச்சுக்குளவி எனப்படும் ஒருவகைப் பூச்சிகளால் பரப்பப்படுவதாக தாவரவியலாளர்கள் சந்தேகிக்கின்றனர்.

அண்மையில் ஏற்பட்ட ஆழிப் பேரலை அனர்த்தத்தின் பின்னர் இந்த முடிச்சுக் குளவிகள் குடாநாட்டில் தென்படுகின்றன என்று தாவரவியலாளர்கள் கூறுகின்றனர்.

இந்த முடிச்சுக் குளவிகளின் தாக்கம், தடுப்பு முறைகள் பற்றிய விளக்கங்கள் மக்களுக்கு வழங்கப்படவேண்டும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

குடாநாட்டின் சீதோசண நிலைமைக்கேற்ப வளர்த்து பயன்தரும் முள்முருக்க மரங்களை வீண் பீதி காரணமாக அழித்தொழிக்கவேண்டாம் என்று தாவரவியல் நிபுணர்கள் பொதுமக்களை அறிவுறுத்துகின்றனர். (ஐ)

# யாழ். திருமறைக் கலாமன்றத்தில் 'பலிக்களம்' திருப்பாடுகளின் காட்சி

## ஏப்ரல் 5 முதல் 9 வரை நடத்த ஏற்பாடு

யாழ். திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக் காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி இம்முறை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி முதல் 9ஆம் திகதிவரை ஐந்து நாள்களுக்கு மேடையேற்றப்படவுள்ளது.

திருமறைக் கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் அருள்திரு.நீ.மரியசேவியர் அடிகளாரின் எழுத்துரு, நெறியாள்கையில் தயாரிக்கப்பட்டு முதன்முதலாக 1970களில் திருமறைக் கலாமன்றத்தால் மேடையேற்பட்டு தொடர்ந்து பல்வேறு ஆண்டுகளில் இலங்கையின் பல பகுதிகளிலும் உலக நாடுகள் பலவற்றிலும் மேடையேற்றப்பட்டு அனைவரது வரவேற்புகளையும் பாராட்டுகளையும் பெற்ற 'பலிக்களம்' திருப்பாடுகளின் காட்சியே காலத்திற்கேற்ற மாற்றங்களுடன் இம்முறை மீண்டும் அரங்கேறுகின்றது.

குறிப்பிட்ட நாள்களில் தினமும் மாலை 7 மணிக்குத் திருப்பாடுகளின் காட்சி ஆரம்பமாகும் என்றும் பார்வையாளர்கள் இறுதிநாள்கள்வரை காத்தி ருக்காமல் ஆரம்ப நாளில் பார்வையிட்டு இறுதி நாள்களில் நிலவும் நெருக்கடிகளைத் தவிர்க்க உதவுமாறு திருமறைக் கலாமன்றம் வேண்டுகோள்விடுத்துள்ளது.

200இற்கும் அதிகமான கலைஞர்கள் பங்கேற்கும் 'பலிக்களம்' ஆற்றுகைக்கான முன் ஏற்பாடுகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

இதேவேளை, கொழும்பு திருமறைக்கலாமன்றம் தயாரித்து வழங்கும் தவக்கால ஆற்றுகையான 'கழுமரச் சிலுவை' இன்று மாலை 7 மணிக்குக் கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலய முன்றிலில் மேடையேற்றப்படவுள்ளது. (த)

# குளங்கள், வாவிகளைப் பாதுகாக்க விசேட திட்டம்

நாடளாவிய ரீதியில் குளங்கள், ஆறுகள், வாவிகள், கண்டல் தாவரங்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையினர் விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் நோக்குடன் இத்திட்டம் அமுல்படுத்தப்படுகிறது. இதன் முதற்கட்டமாக சகல பிரதேச செயலர் பிரிவிலுமுள்ள குளங்கள், ஆறுகள், வாவிகள் ஆகியவற்றின் விவரங்களையும் இவற்றின் கரையோரங்களிலுள்ள கண்டல் தாவரங்களின் விவரங்களையும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினர் திரட்டிவருகின்றனர். குடாநாட்டிலும் சகல கிராம அலுவலர்கள் மூலமும் இந்த விவரங்கள் திரட்டப்படுகின்றன.

இதுதொடர்பான சுற்றறிக்கை ஒன்று சகல பிரதேச செயலர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(த-175)

## உதயவாக்கு

உன் பழைய நண்பர்களைக் கைவிடாதே. புதிய நண்பர்கள் அவர்களுக்கு இணையாகமாட்டார்கள்.

- *விவிலியத்திலிருந்து*

## நாளை

பங்குனி 12
ஞாயிற்றுக்கிழமை
26.03.2006
திதி : துவாதசி
முன்னிரவு: 11.34
நட்சத்திரம் : அவிட்டம்
பின்னிரவு : 12.35
சுபநேரம் : 09.15 - 10.45
ராகுகாலம் :04.45 - 06.15
(யாவும் பழைய நேரப்படி)

# கலை, இலக்கியப் பெருவிழாவை முன்னிட்டு ஊர்காவற்றுறையில் இலக்கியப் போட்டிகள்

ஊர்காவற்றுறை,மார்ச்25

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையினால் விரைவில் நடத்தப்படவுள்ள தேசிய கலை இலக்கியப் பெருவிழாவை முன்னிட்டு பிரதேச மட்டத்தில் கலை, இலக்கியப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரச ஊழியர்கள் மத்தியில் இந்தப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. கட்டுரை, கவிதை, சிறுகதை, கவிதை விமர்சனப் போட்டி, சிறுகதை விமர்சனப் போட்டி, எழுந்தமான கவிதைப்போட்டி என்பனவே இவ்வாறு நடத்தப்படவுள்ளன.

மேற்படி போட்டிகளை நடத்துவது தொடர்பாகத் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக, ஊர்காவற்றுறை கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு உரிய அறிவுறுத்தல்கள், விண்ணப்படிவங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் -

போட்டிகளுக்குரிய ஆக்கங்களை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் ஒப்படைக்கவேண்டும் என்றும் -

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையின் கலாசார அபிவிருத்தி உதவியாளர் எஸ்.விஜயரட்சகன் அறிவித்துள்ளார்.

கடந்த வருடம் போன்று இந்த வருடமும் கலை, இலக்கியப் பெருவிழாவை வெகுவிமரிசையாக நட்த்துவதற்கான விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன என்றும் - அவர் மேலும் கூறினார்.

(எ-16)



## தேவை

பின்வரும் வேலைகளுக்கு ஆள்கள் தேவை
1) காசாளர்
2) மேற்பார்வையாளர்
5) உணவு பரிமாறுவோர்

ஆர்வம் உள்ளோர் விண்ணப்பிக்கவும்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**மலாயன் கபே**
36,38, பெரிய கடை, யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 2373

(48518)
(26.19.16)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 - 10 - 1959



உதிர்வு 25 - 03 - 2002

திருமதி

**குருநாதன் அலெக்சாந்திரியா**

அம்மா ஆண்டுகள் நான்கு கடந்தும்
ஆறவில்லை எம் துயரம்
நித்தமும் உங்கள் நினைவில் நெஞ்சுருகி
வாழுகின்றோம்... அம்மா... உங்கள் பாசமிகு
கணவனும் மூன்று முத்துக்களும்

**அம்மா! உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.**

17/1, சாஸ்திரியார் லேன்,
யாழ்ப்பாணம். (48516)(26.19.16)

அன்புக் கணவர், பிள்ளைகள்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 - 11 - 1901



மறைவு 25 - 03 - 2001

திருமதி

**பிலிப்பு செல்லம்மா**

தன்னையே கரைத்து தான் ஈன்றவர்களை
தரணியில் தலை நிமிர்ந்து நிற்க
அரும்பாடுபட்டு நீண்டகாலம் வாழ்ந்து
மீளாத் துயில்கொண்ட உங்களை
இந்நாளில் நினைவு கூருகிறோம்.

தகவல்:
பிலிப்பு தருமநாயகம் (மகன்),
43 /12, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

அனைத்துக் குடும்பத்தவர்கள்.

(48509)(26.19.16)


நேற்றாதீவின்

அருட்தந்தை போல் றொபின்சனுடன்

**தபக்கால இறை தியான வழிபாடுகள்**

திங்கள் 27, மாலை 6-10 மணிவரை
**கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயம்**

செவ்வாய் 28, காலை 8.30-12 மணிவரை
**குருநகர், புனித யாகப்பர் ஆலயம்**

செவ்வாய் 28, மாலை 6-10 மணிவரை
**நவாலி, புனித பேதுரு ஆலயம்**



இறை அனுபவம் பெற்று விடுதலை வாழ்வு காண
உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இறை தியானக் குழுவினர்.



solidar
An INGO consortium including NPA, SAH and ASB

## ஆங்கில ஆசிரியர் தேவை

எமது நிறுவனத்தில் உரையாடல் (Conversational) ஆங்கிலம் கற்பிப்பதற்கு ஆங்கில ஆசிரியர் தேவைப்படுகின்றார். தகைமையும் அனுபவமும் உடையவர்கள் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு தங்களது சுயவிவரங்களை 27.03.2006 இற்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

**Mrs.S.Mohanathas,**
**Solidar INGO consortium,**
**No. 156, Jaffna Road,**
**Paranthan,**
**Kilinochchi.**

(க/48474)(32.11.19.26)



## தொலைபேசி இணைப்பு தேவை

திருநெல்வேலிப்பகுதியில் SLT/SUNTEL தொலைபேசி இணைப்பு உடனடியாகத் தேவை. விற்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(48513) 0777 563213


## ஆங்கிலப் பயிற்சியில் சித்தியடைந்தோர் விவரம்

யாழ்ப்பாணம்,மார்ச் 25

அரச கரும மொழித் திணைக்களத்தின் அனுசரணையுடன் முகாமைத்துவப் பயிற்சி நெறித் திணைக்களத்தினால் அரச ஊழியர்களுக்கு நடத்தப்பட்ட அடிப்படை ஆங்கில பயிற்சி நெறியில் சித்தியடைந்தவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டோர் தமது சான்றிதழ்களை கடமை நாள்களில் யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

சித்தியடைந்தவர்களின் பெயர் விவரம் வருமாறு:

பி.தர்மசங்கரன் (வலி.கிழக்கு, பிரதேசசபை), எ.திருநாவுக்கரசு (யாழ்.தேர்தல் திணைக்களம்), வி.யோகராசா (யாழ்.கல்வி வலயம்), கே.சௌந்தரராஜன் (ஊர்காவற்றுறை பிரதேச சபை), பி.ஜெயகரன் (வலி. வடக்கு பிரதேச சபை), என்.சச்சிதானந்தம் (நல்லூர் பிரதேச சபை), கே.தயனீஸ்வரி (நல்லூர் பிரதேச சபை).

வி.சண்முகம் (யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலகம்), டி.எஸ்.சொலமன் (யாழ்.விவசாயத்திணைக்களம்), எஸ்.சுசீந்திரராஜன் (நல்லூர் பிரதேச சபை),

ஆர்.ஜக்குலின் (யாழ்.செயலகம்), கே.நடராஜா (யாழ்.செயலகம்), எஸ்.சிறிகரன் (யாழ். செயலகம்), பி.மஞ்சுளா (கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்), ஜே.பத்மாவதி (கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்), ரி.சங்கமுகநாதன் (நில அளவைத் திணைக்களம்).

எஸ்.தனராஜ் (நிலஅளவைத்திணைக்களம்), ரி.சிவனதாசர்மா (யாழ்.செயலகம்), கே.வீணா (ஊர்காவற்றுறை பிரதேச சபை), எஸ்.சிவமோகன் (வலிகாமம் கல்வி வலயம்).

எஸ்.சாரதாதேவி(வலிகாமம் கல்வி வலயம்), பி.ஜசீலா (வலிகாமம் கல்வி வலயம்), எஸ்.மாணிக்கம் (வலிகாமம் கல்வி வலயம்), ஐ.சிவலோகநாதன் (வலிகாமம் பிரதேச சபை), பி.வைரமுத்து (வலிகாமம் பிரதேச சபை), எ.கணேசானந்தராஜா (வலிகாமம் பிரதேசசபை), எம்.ராதா (வலிகாமம் கல்வி வலயம்), எஸ்.நாகமுத்து (வடமராட்சி கல்வி வலயம்), எஸ்.சந்திரயோகன் (வடமராட்சி கல்வி வலயம்), பி.ராசமணி (வடமராட்சி கல்வி வலயம்).

எஸ்.தேவகி (வடமராட்சி கல்வி வலயம்), ஆர்.சுதர்சன் (வடமராட்சி கல்வி வலயம்), எஸ்.லிங்கேஸ்வரன் (வடமராட்சி கல்வி வலயம்), வி.மைதிலி (வடமராட்சி கல்வி வலயம்), ஆர்.ரமேஷ் (பருத்தித்துறை கல்வி வலயம்), ஆர்.சத்யானந்தன் (பருத்தித்துறை நகரசபை), ரி.ராதிக்கா (வல்வெட்டித்துறை நகரசபை).

எஸ்.திருஞானசுந்தரம் (வல்வெட்டித்துறை நகரசபை), எஸ்.பரமேஸ்வரன்(கரவெட்டி பிரதேசசபை), சி.நாகேந்திரம், (பருத்தித்துறை சுகாதார வைத்திய நிலையம்), பி.ரவிசந்திரன் (பருத்தித்துறை சுகாதார வைத்திய நிலையம்), எஸ்.பிரணவன் (பருத்தித்துறை சுகாதார வைத்திய நிலையம்). (த-202)


## ஸ்ரீ விநாயகர் ஜோதிடம்



வம்சாவளியாக அம்பாளின் அருள்கொண்டு இந்தியாவைல் இருந்து வருகை தந்துள்ள

**வி.நாகராஜ சுவாமிகள் N.முனியம்மா** அவர்கள்

இவர்கள் ஜாதகம், கைரேகை மூலமாகத் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை மற்றும் வியாபார லட்சுமிகர விடயமான பொருத்தம். குடும்பப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்றனர். வெளிநாட்டுப் பயணம் மற்றும் எதிர்காலப் பலன்களை அறிவதற்கும் நாடுங்கள்.

➢ எந்தவிதமான பிரச்சினைகள் இருந்தாலும் சுவாமிகளைச் சந்திக்கலாம். (47885) (26.19.16)

**பிள்ளையார் இன்**

அறை எண் [illegible], மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.:077 9582596.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**வல்லிபுரம் செல்லையா**

(ஓய்வுபெற்ற லிகிதர், கச்சேரி-திருகோணமலை, அசோகா ஸ்ரோர்ஸ் முன்னாள் உரிமையாளர், திருகோணமலை)

திதி: 25.03.2006 தசமி

**பிறப்பு 19.10.1929** — **இறப்பு 23.02.2006**

வாழ வைத்த எம் தந்தை
வானகம் சென்றதனால்
கண் விழிகள் நீர் சுரக்க
கலங்கியே நாம் நிற்கின்றோம்
கனவு போல முப்பத்தொரு
நாள் கடந்து சென்றதுவோ
அன்பான எங்கள் அப்பாவே!
ஆண்டவனை வேண்டுகின்றோம்
ஆன்ம சாந்தி பெற்றே
இறை நிழலில் வாழ்ந்திடவே!

'அசோக் வாசம்',
ஏழாலை மத்தி, ஏழாலை.

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(சி.48516)(39.26.19.16)

## மரண அறிவித்தல்



திருமதி

**தேவரத்தினம் இராசையா**

பத்தாவத்தை, இளவாலையைப் பிறப்பிடமாகவும், நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவரத்தினம் இராசையா அவர்கள் 22-03-2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் (இளைப்பாறிய ஓவசியர் P.W.D.) பாசமிகு மனைவியும் இராசேஸ்வரி (இத்தாலி), இரானேஸ்வரி (கனடா), ராஜசற்குணேஸ்வரி (இத்தாலி), தவறட்ணராஜா (வைத்தியர்) ஆகியோரின் அன்புத் தாயும் தேவதுரை (இத்தாலி), துரைசாமி (கனடா), ஜெயதுரை (இத்தாலி), மெனிற்றா கொன்சீலி ஆகியோரின் அன்பு மாமியும் அனுஷா (கனடா), நந்தினி (இத்தாலி), சாந்தினி (கனடா), நியேந்திரன் (கனடா), சசிந்திரன் (கனடா), அனுராதா (லண்டன்), றுசிந்திரன் (கனடா), சுபிற்றா (இத்தாலி), ஜெனிற்றா (இத்தாலி), சுஜிகரன் (மட்டக்களப்பு, தேசிய கல்வியற்கல்லூரி), டனுற்றா (இத்தாலி), சசிக்கா (இளவாலை கன்னியர்மடம் ம.வி. மாணவி), றதிகரன் (ஹென்றியரசா கல்லூரி மாணவன்), துஷ்யந்தன் (லண்டன்), நியூட்டன் (இத்தாலி), பிரபு (கனடா), ஸ்ரான்லி (லண்டன்) ஜோய் (இத்தாலி) ஆகியோரின் பேர்த்தியும் நட்டாசா, சகானா, சோன், நிஷான், கீசனா ஆகியோரின் அன்புப் பூட்டியும். காலஞ்சென்ற அன்னரத்தினம், காலஞ்சென்ற சவுந்தரநாயகம், காலஞ்சென்ற வேதநாயகம், காலஞ்சென்ற திருமதி சவுந்தரநாயகம், காலஞ்சென்ற இராசநாயகம், காலஞ்சென்ற அமிர்தநாயகம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற தம்பிஐயா, இன்னாசிமுத்து, திருமதி வேதநாயகம், காலஞ்சென்ற பொன்னையா, சின்னையா ஆகி யோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-03-2006) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3.30 மணியளவில் இளவாலை அன்னம்மாள் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்தாவத்தை,
இளவாலை.

(48517)(26.19.16)

தகவல்:
**பிள்ளைகள்.**

# மாகாணப் பொதுநிர்வாக அமைச்சின் இடமாற்றம் மீண்டும் நடைமுறைக்கு!

யாழ்ப்பாணம்,மார்ச்25

வடக்கு - கிழக்கு மாகாணப் பொது நிர்வாக அமைச்சினால் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த வருடாந்த இடமாற்றம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மாகாண பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் அ.கி.பத்மநாதன் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த வருடாந்த இடமாற்றம் எதிர்வரும் 3ஆம் திகதி முதல் மீண்டும் நடைமுறைக்கு வரவுள்ளது.

இடமாற்றம் பெற்று புதிய சேவை நிலையத்துக்குச் செல்லவுள்ள அலுவலர்களைச் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் விடுவித்து உதவவேண்டும் என்றும் மாகாணச் செயலாளர் கேட்டுள்ளார்.

(த-185)



யாழ். சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலையில் ஆரம்பப் பிரிவுக்கான புதிய மூன்று மாடிக் கட்டடத்தை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. யாழ். மேலதிக மாகாணக் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த பொறியியலாளர் கு.சிவபாலன் கட்டடத்துக்கான அடிக்கல்லை நடுவதற்குத் தயாராவதைப் படத்தில் காணலாம். (படம்: குருநகர்ச் செய்தியாளர்)

### கல்வி நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சை:

# விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்கு தமிழ் அதிகாரிகள் பின்னடிப்பு!

## இதனால் பரீட்சார்த்திகள் பாதிப்பு

அச்சுவேலி,மார்ச்25

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் IIIஇற்கு ஆள்களைச் சேர்த்துக்கொள்வதற்காக நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பீடுசெய்யும் பணியில் ஈடுபடுவதற்கு வடக்கு - கிழக்கைச் சேர்ந்த தமிழ்க் கல்வி நிர்வாக அதிகாரிகள் முன்வராமையால் - பின்னடிப்பதால் - விடைத்தாள்கள் மதிப்பீட்டில் தாமதம் மற்றும் பாதிப்புகள் ஏற்படுவதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு - கிழக்கைச் சேர்ந்த கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் கொழும்பில் நடைபெறும் விடைத்தாள் திருத்தும்பணியில் கலந்துகொள்ள பின்னடிக்கின்றனர். இதனால் தமிழ்ப் பரீட்சார்த்திகளின் விடைத்தாள்களைப் பிரதேச கள நிலைமையைக் கருத்திற் கொண்டு மதிப்பீடு செய்வதே பொருத்தமானதாக இருக்கும் .

கள நிலைமையைப் புரிந்துகொள்ளாத முறையில் மதிப்பீடு செய்வதால் எதிர்பாராத பாதிப்புகளும் ஏற்படலாம் எனக் கூறப்படுகின்றது.

''கல்வி நிர்வாகம் பற்றிய விடய ஆய்வு'' வினாப்பத்திரத்திற்கு அளிக்கப்படும் விடையில் வடக்கு - கிழக்குக் கள நிலையைக் கருத்திற்கொண்டு சில விடய ஆய்வுகள் பரீட்சார்த்திகளால் முன்வைக்கப்பட்டிருக்கலாம்.

இதனை மதிப்பீடு செய்யும் பரீட்சகர் வடக்கு - கிழக்குக் கள நிலையை அனுபவ ரீதியாகத் தெரிந்துகொள்ளாதவராக இருக்கும்போது முன்வைக்கப்பட்ட விடை தொடர்பான கருத்துகளை முரண்பாடானவையாக அவர் கண்டுகொள்ளலாம். அதன்படி மதிப்பீடு செய்யலாம் எனக் கூறப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு பகுதி கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த அதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் இணைந்துகொள்வதற்கு ஆர்வத்தோடு முன்வராத சூழ்நிலை எதிர்பாராத சில பாதிப்புகளை வடக்கு - கிழக்கைச் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்கு ஏற்படுத்திவிடுவதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

(த-11)

# நவாலி கமநல நிலையத்துக்கு டச்சு வீதியில் காணி அன்பளிப்பு

## 'நிகொட்' நிதியில் அங்கு புதிய கட்டடம் அமையும்

யாழ்ப்பாணம்,மார்ச்25

நவாலி - டச்சு வீதியில் நவாலி கமநல சேவைகள் நிலையம் அமைப்பதற்கான காணியை மானிப்பாயைச் சேர்ந்த சட்டத்தரணி இ.வசந்தசேனன் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் கையொப்பம் இட்டு உத்தியோகபூர்வமாக 4 பரப்புக் காணியை இலவசமாகப் பெற்றுக்கொண்டார்.

நவாலி - டச்சு வீதியில் புதிய கமநல சேவைகள் நிலையத்திற்கு வழங்கப்பட்ட காணியில் 'நிகொட்' திட்ட நிதியுதவியுடன் புதிய கட்டடத்திற்கான நிர்மாணப் பணிகள் நடைபெறவுள்ளன.

இதற்கான ஏற்பாட்டை மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் மேற்கொண்டுள்ளது.

தற்போது காணி துப்புரவுப் பணி துரித கதியில் இடம்பெற்று வருகின்றது. அடுத்த வார முற்பகுதியில் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நடப்படவுள்ளது.

(த-185)




# ஆங்கிலப் பாசறை

யாழ்ப்பாணம்,மார்ச்25

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் வெளிச்சவீடு பாடசாலை அலகு மாணவர்களுக்கான ஒருநாள் ஆங்கிலப் பாசறை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாணவர்கள் தமது ஆங்கில மொழிக் கற்றலை பாடல்கள், கதைகள், மொழி விளையாட்டுகள் ஊடாக மேற்கொள்வதற்கும் சுய ஆக்க வெளிப்பாட்டிற்கும் ஏற்ற வகையில் இந்தப் பாசறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பாசறையில் 6 பாடசாலைகளைச் சேர்ந்த தரம்6,7 வகுப்புகளின் மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஒவ்வொரு கற்றல் முயற்சியிலும் சிறந்த மாணவர் தெரிவுசெய்யப்பட்டு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்படுவர்.

(த-202)

### சுனாமியால் பாதிக்கப்பட்ட

# உடுப்பிட்டியில் 6 கிராமங்கள் புனரமைப்புக்குத் தெரிவு!

யாழ்ப்பாணம்,மார்ச்25

சுனாமி அவசர வீடு மீள் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் மீள் புனரமைப்புச் செய்வதற்கு உடுப்பிட்டி வடக்குப் பிரதேசத்திற்குட்பட்ட 6 கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மயிலியதனை, நாவலடி, ஊரிக்காடு, கொம்மந்தறை, கெருடாவில், கம்பர்மலை ஆகிய சேதமடைந்த வீடுகளே புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இவ்வாறு பாதிக்கப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்குத் தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையிலான மீள் புனரமைப்பு நிதி பருத்தித்துறைப் பிரதேச செயலாளரினால் வழங்கப்படுவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு நகர அபிவிருத்தி மற்றும் நீர்வழங்கல் அமைச்சு நிதிப் பங்களிப்பு வழங்கவுள்ளது.

(த-185)

# தென்மராட்சி வலயத்தில் உடை அமைத்தல் பயிற்சி

தென்மராட்சி,மார்ச்25

தென்மராட்சி கல்வி வலய முறைசாராப் பிரிவினர் உடை அமைத்தல் பயிற்சி நெறியினை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் இப்பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்ளவுள்ள பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள் விண்ணப்பப்படிவத்தை அந்தந்தப் பாடசாலைகளில் பெற்று எதிர்வரும் ஐந்தாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (த-117)

# யாழ். தேர்தல் பணியகம் கணனி மயப்படுத்தப்படும்

யாழ்ப்பாணம்,மார்ச்25

யாழ். தேர்தல் அலுவலகத்தைக் கணனி மயப்படுத்தும் நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

நாடளாவிய ரீதியில் தேர்தல் திணைக்களத்தைக் கணனி மயப்படுத்தும் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

தேர்தல் தொடர்பான தரவுகளைச் சிறந்த முறையில் பேணுவதற்கும் தரவுகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்வதற்கும் ஏற்ற வகையில் அலுவலகப் பணிகள் கணனி மயப்படுத்தப்படவுள்ளன.

இதனூடாக வாக்காளர்கள் தமது வாக்காளர் இடாப்புப் பிரதிகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்ளமுடியும் - என்றார்.

(த-202-203)

# உடுவில் பிரிவில் வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளை பதியக் கோரிக்கை

வலி.வடக்கு,மார்ச்25


உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் கல்வி கற்று வேலைவாய்ப்பற்று இருக்கும் இளைஞர், யுவதிகளைப் பதிவுசெய்வதற்கான நடவடிக்கையை உடுவில் பிரதேச செயலகத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

ஜி.சீ.ஈ. உயர்தரம் வரை கல்வி கற்றுள்ள இருபாலாரையும் எதிர்வரும் 28ஆம் திகதி 10 மணிக்கு பிரதேச செயலகத்திற்கு உரிய ஆவணங்களுடன் வருகைதந்து பதிவுசெய்யுமாறு கேட்கப்பட்டிருக்கிறது.

தொழில் வலைப்பின்னலில் பதிவுசெய்ய சமுகம் கொடுக்கும் விண்ணப்பதாரிகள் தமது பிறப்புச்சான்றிதழ், ஆள் அடையாள அட்டை மற்றும் கல்விச் சான்றிதழ்களின் பிரதிகளையும்கொண்டுவரும்படி உடுவில் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

(த-86)





சங்கானை அரசினர் வைத்தியசாலையில் புதிதாக நிறுவப்பட்ட திரு.திருமதி பொன்னையா மீனாட்சி ஞாபகார்த்த பொதுமக்கள் தங்கும் மண்டபத்தினதும் வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தினால் நிறுவப்பட்ட துவிச்சக்கரவண்டி தரிப்பு நிலையத்தினதும் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் நாடாவைவெட்டி பொதுமக்கள் தங்கும் மண்டபத்தைத் திறந்து வைப்பதை முதலாவது படத்தில் காணலாம்.

அருகில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்றாஸ், வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் பொன்.சாம்பசிவம் ஆகியோர் காணப்படுகின்றனர். புதிதாக நிறுவப்பட்ட பொதுமக்கள் தங்கும் மண்டபத்தை அடுத்துள்ள படத்தில் காணலாம்.

(படங்கள்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)

# தவக்காலச் சிந்தனை 25

## நிபந்தனையற்ற அர்ப்பணிப்பு

மங்கள வார்த்தை நிகழ்வின்போது இறைவனின் வாழ்த்தையும் அழைப்பையும் பணிப்புரைகளையும் வானதூதர் கபிரியேல் வழியாக அன்னை மரியாள் பெற்றுக்கொண்டார். தமது சம்மதத்தையும் பணிவையும் அறிக்கையிடுவதற்கு முன் சஞ்சலப்பட்டார்; கலங்கினார். மீண்டும் தெளிவுபெற்றார். ''நான் ஆண்டவரின் அடிமை. உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்'' என்று இறை விருப்பத்திற்குத் தம்மை நிபந்தனையின்றி முழுமையாய் அர்ப்பணித்தார். (லூக். 1:38) ''அருள் மிகப் பெற்றவரே வாழ்க. ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்'' என்ற வார்த்தைகள் இறைவனுடைய வார்த்தைகள் சரித்திரத்தில் யாருக்குமே கிடைக்காத மாபெரும் வாழ்த்து மரியாவுக்குக் கிடைக்கின்றது. இறைவனின் மீட்புத் திட்டத்தில் வெறும் கருவியாக மட்டுமல்ல மிகப் பெரும் பங்கு வகிக்கின்றார்.

ஒவ்வொரு விசுவாசிகளையும் அன்போடு பின் தொடர்ந்து செல்லும் கடவுள் ஒருவர் இருக்கிறார். அவர் நன்மையைச் சார்ந்திருக்கிறார் என்று புரிந்துகொள்வது நமக்குப் பெரும் ஆறுதல் அழிக்கும் காரியம். அவர் இங்கே ஒவ்வொரு விசுவாசியிடமும் நீதி நன்மைகளைச் சார்ந்து வாழ்கிறார். தீமை நிறைந்த மனிதன் அச்சத்திற்கும் அதன் வழியாக வன்முறைக்கும் அடிமையாகின்றான். அதனால், அவன் ஒதுக்கப்படுகிறான்.

எனவே, மனிதன் இறைவனிடம் திரும்பவேண்டும். அப்போது அநீதி அழிவுறும். நீதி நிலைநாட்டப்பெறும். ஏனெனில், ஆண்டவர் அனைத்தையும் அறிபவர் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து வாழ அழைக்கப்பட்டுள்ளோம்.

ரீ.கீதபொன்கலன், கொழும்புத்துறை.

# பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச்25

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் வெளிச்ச வீடு பாடசாலை அலகு அண்மையில் நடத்திய ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கான பொது அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (த-202)


## மெய்வல்லுநர் திறன் விருத்திப் பயிற்சி

கலாநிதி எதிர்வீரசிங்கம் அவர்கள் மெய்வல்லுநர் தொடர்திறன் விருத்திப்பயிற்சி நெறியொன்றை கிளி நொச்சி மத்திய மைதானத்தில் ஆரம்பிக்கத்திட்டமிட்டுள்ளார். இப் பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள விரும்பும் 18- 24 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலரையும் மார்ச் மாதம் 27 ஆம் திகதி பி.ப. 4.30 மணிக்கு மைதானத்துக்கு சமுகமளிக்கும்படி வேண்டுகின்றார்.

சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் பயிற்சி பெற விரும்புபவர்கள் ஏப்ரல் முதலாம் திகதி மு.ப. 10 மணிக்கு அல்லது பி.ப. 4 மணிக்கு கிளிநொச்சி மத்திய மைதானத்தில் சமுகமளிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

**இளையோர் செயற்பாட்டு நிறுவனம்,**
**தலைமைப் பணிமனை,**
**கிளிநொச்சி.**

(சீ.48508) (89-15-45)


## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
18.12.1952



மறைவு
24.03.1998

அமரர் **கனகரத்தினம் பாலசுந்தரராசா** B.sc.
(ஓய்வு பெற்ற சிரேஷ்ட எழுதுவினைஞர்)
*திதி: ஏகாதசி 25.03.2006*

ஆண்டுகள் எட்டுப் போனாலும்
ஆறாது என் மனத்துயர்
நீங்காத உன் நினைவுகள்
என் நெஞ்சை விட்டகலா

தம்பலத்தனை,
துன்னாலை வடக்கு, கரவெட்டி.

என்றும் உம் நினைவில் வாழும்:
பா.பாஞ்சாலி (மனைவி).

(48426) (39-15-45)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



*அமரர் பொன்னுத்துரை செல்வரத்தினம்*

மலர்வு: 15.05.1948 உதிர்வு:17.03.2004

**திதி:ஏகாதசி**

**ஆண்டுகள் இரண்டு மறைந்தாலும்**
**அப்பாவே உங்கள் நினைவுகள்**
**என்றும் எம்மை விட்டு அகலவில்லை**
**ஆத்மா சாந்தியடைய இறைவனை**
**வேண்டுகின்றோம்.**

மனைவி :சரஸ்வதி,
பிள்ளைகள்: செல்வகுமார், செல்வச்சந்திரன்,
செல்வசேகரன், செல்வநாதன்.

பாரதிபுலம்,
திருநெல்வேலி.

(48474) (39-15-45)

## மகளிர் தின நிகழ்வு

மகளிர் தினத்தை முன்னிட்டு நாயன் மார்கட்டு பாரதி மன்ற மகளிர் பிரிவு நாளை ஞாயிற்றுக் கிழமை மகளிருக் கான கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள் ளது.

மகளிர் பிரிவின் தலைவி திருமதி சி.கனகரத்தினம் தலைமையில் பாரதி மன்ற சனசமூக நிலைய மண்டபத்தில் பி.ப.5.30 மணிக்கு நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். (3-111)

## மாடிக்கட்டடத்திற்கு அடிக்கல் நடுகை

குருநகர், மார்ச்25

யாழ்.சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் ஆரம்ப பிரிவு வகுப்புகள் நடைபெறும் இடத்தில் 'நிக்கொட்' திட்டத்தின் நிதி உதவியுடன் புதிய மூன்று மாடிக்கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல்லை யாழ்.மேலதிக மாகாணக் கல்வித் திணைக்களப் பொறியியலாளர் கு.சிவபாலன் அண்மையில் நட்டு கட்டப்பணிகளை ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், மாணவிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-51)

## பிரிவுபசார விழா

தென்மராட்சி, மார்ச்25

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி இளைப்பாறிய மு.நாகேந்திரராசாவுக்கு கடந்த 22 ஆம் திகதி கல்லூரி மண்டபத்தில் பிரிவுபசார விழா நடத்தப்பட்டது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் பழைய மாணவர் சங்கமும் இணைந்து இப் பிரிவுபசார விழாவினை நடத்தினர்.

கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் தென்மராட்சி கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் தா.பாலசுந்தரமும், பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் மக்கள் வங்கியின் அச்சுவேலிக் கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கமும் பெற்றோர் சார்பில் திருமதி சிவபாதசுந்தரமும் உரையாற்றினர். (த-117)

## சலனசித்திரம் அமைப்பின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச் 25

சலனசித்திரம் அமைப்பின் பிரதேச நிர்வாகிகள் சந்திப்பும் பிரதேச திரைக்கலைச் சங்கங்களின் ஒன்று கூடலும் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தில் நடைபெறவுள்ளன.

அமைப்பின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் எம்.சாந்தன் சத்தியகீர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்ப்பாண திரைக்கலைச் சமூகம் ஒன்றை உருவாக்குதல் தொடர்பாகவும் கலந்துரையாடப் படவுள்ளது. (த-202)

## 'பக்ஸ்' இல்லாததால் தகவல் அனுப்புவதில் சிரமம்

வலி. தென்மேற்கு,மார்ச் 25

பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்தில் 'பக்ஸ்' இயந்திரம் இல்லாமையால் பக்ஸ் மூலம் தகவல் அனுப்ப முடியாதிருப்பதாக இப் பகுதி மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இந்த அலுவலகத்திற்கு பக்ஸ் இயந்திரம் ஒன்றை வழங்குமாறு தபால் அதிபர் உரிய அதிகாரிகளிடம் கோரியிருந்தார். எனினும், நீண்ட நாள்களாகியும் இதுவரை பக்ஸ் வசதி செய்து தரப்படவில்லை என்று தெரிய வருகின்றது.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச் 25

யாழ். பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தின் ஏற்பாட்டில் கிறிஸ்தவ பாடமீட்டல் கருத்தரங்கு நேற்று ஆரம்பமாகியது.

இக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையம் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. 5 மணி வரை யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் தொடர்ந்து நடைபெறவுள்ளது. (3-202)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரி, கைதடி நுணாவிலைச்சேர்ந்த
திரு(Late) திருமதி பூ. சந்திரமௌலீசன் தம்பதியரின்
புதல்வன்
யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவன்

**Eng. S. Thavabalan,**
MIEE, MIEEE, AMIE(SL), IDAIT, Dip.In.Tech,
(CCNP, CCNA, MCSE)
(M.BA Student - ICFAI University)
Engineering Council (U.K)

பரீட்சையில் சித்தியெய்தியமையை
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
-நண்பர்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும்



மண்ணில்
04.12.1914

விண்ணில்
24.02.2006

### அமரர் நல்லதம்பி சுப்பிரமணியம்

*(திதி: ஏகாதசி)*

அன்னாரது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி கிரியை இன்று (25.03.2006) சனிக்கிழமை இரவு நடைபெற்று, வீட்டுக் கிரியைகள் நாளை (26.03.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணியளவில் நடைபெறும். இந்த வைபவத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்துகொண்டு அவரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஈமச் சடங்குகளில் கலந்துகொண்டு எமக்கு ஆறுதல் தந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*வாகையடி, இமையாணன்,*
*உடுப்பிட்டி.*

ச.திலகேஸ்வரன் *(மணியம்)*,
திருமதி இ.மின்னொளிவதனா.

(சீ.48509) (39-45-15)

## மரண அறிவித்தல்

### கதிர்காமு ஜெயராசா



அராலி வடக்கு, செட்டியார் மடத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு விவேகானந்தாமேடு இல. 100ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு ஜெயராசா அவர்கள் 20.03.2006 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கதிர்காமு- சிவபாக்கியம் தம்பதியரின் மகனும் புஸ்பரஜனாவின் அன்புக் கணவரும் உபாசகியின் அன்புத் தந்தையும் நாவற்குழி, தச்சன்தோப்பைச் சேர்ந்த முத்தையா- நாகம்மா தம்பதியரின் மருமகனும் கணேசராசா (ஜேர்மனி), பேரின்பராசா (கனடா), வரதராசா (நியூராஜன் சலூன்- மானிப்பாய்), சற்குணதேவி (அராலி), சறோஜாதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் புஸ்ராஜா (சுவிஸ்), புஸ்பாகரன் (சுவிஸ்), புஸ்பரஞ்சன் (கொலண்ட்), புஸ்பமலர் (தெமட்டகொட), புஸ்பராணி (கனடா), புஸ்பலதா (சுவிஸ்), புஸ்பமாலா (லண்டன்), மனோரஞ்சிதமலர் (ஜேர்மனி), சாந்தினி (கனடா), மனோன்மணி (கோண்டாவில்), சிவலிங்கம் (அராலி), மனோரஞ்சன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் பொன்னுத்துரை (தெமட்டகொட), ரூபன் (கனடா), பாஸ்கரன் (சுவிஸ்), சிவா (லண்டன்), யோகராணி (சுவிஸ்), ரஞ்சிதா (கொலண்ட்), ரூபா (சுவிஸ்) ஆகியோரின் சகலனும் பத்மியி, மிதுனா (ஜேர்மனி), சுஜா, சுஜீத்தா (கனடா), புருஷோத், தர்ஷா, தர்மினி, சர்மினி, பிரஷா (கோண்டாவில்), சிந்துஷா, நிரோஷா, பபிராஜ் (கனடா), பபுசியா, ஜீவித் (கனடா), அபிநயா (கனடா), மதுரங்கா, அஸ்வத் (சுவிஸ்), அபிராமி, டில்லுஷா (லண்டன்), பகீரதன், கௌசி, ராகுலன், தர்சினி (அராலி), ஜெசிகா, ஜெயசூரன், ஜெயசீலன் (சுவிஸ்), லக்சிகா (சுவிஸ்), அஜிநாத், டிரோன் (சுவிஸ்), கவிநிலா (கொலண்ட்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இலக்கம் 100, விவேகானந்தாமேடு இல்லத்தில் நடைபெற்று, நாளை (26.03.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் பூதவுடல் பொரளை ஜெயவர்த்தனா மலர்ச்சாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப. 3 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 100, விவேகானந்தா மேடு,*
*கொழும்பு- 13.*

*தகவல்:*
*குடும்பத்தினர்.*

(48499) (39-15-45)

# மகாஜனாவை இன்னிங்ஸால் வென்றது மானிப்பாய் இந்து

யாழ்ப்பாணம்,மார்ச்25

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் மகாஜனாக் கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்டப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி இன்னிங்ஸாலும் 40 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்து 9 இலக்குகளை இழந்து 289 ஓட்டங்களுடன் ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது. இதில் விநோத், பார்த்தீபன், சிறீரமணன், சாரங்கன் முறையே 92, 63, 26, 25 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில் புவனேசன், ஜீவசங்கர், பிரகலாதன், எல்மோனிக்சன் முறையே 4,2,1,1 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி தனது முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதில் மயூரன், தர்சன், பிரகலாதன் முறையே 45, 23, 18 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் வினோத், கரிதரன், சிறீரமணன், குணசீலன் முறையே 3,3,2,1 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பலோ ஒன் நிலையில் மீண்டும் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 114 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இதில் ஜீவசங்கர், புவனேசன், பிரகலாதன் ஆகியோர் முறையே 34,32,19 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில் விநோத், குணசீலன், கரிதரன், சிறீரமணன் முறையே 6,2,1,1 விக்கெட்டுகளை வீழ்த்தினர். விநோத், கரிதரன் ஆகியோரின் சிறந்த பந்து வீச்சினால் மானிப்பாய் இந்துக் கல்லூரி இன்னிங்ஸாலும் 40 ஓட்டங்களாலும் அபார வெற்றிபெற்றது. (3)

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி சண்றைஸ் வி.கழகம் வெற்றி

யாழ்ப்பாணம்,மார்ச்25

பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகம் நடத்தும் லீக் முறையிலான 17 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கடந்த சனிக்கிழமை பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் சண்றைஸ் வி.க. அணியினர் வெற்றி பெற்றனர்.

சண்றைஸ் வி.க. அணியை எதிர்த்து வீனஸ் வி.க. அணி மோதியது. சண்றைஸ் வி.க. அணி எதிர்த்து விளையாடிய வீனஸ் வி.க. அணியை 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது. (எ-190)

## பட்மின்ரன் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்25

யாழ். மத்திய கல்லூரி உள்ளரங்க விளையாட்டுக் கழகம் மக்கள் வங்கியின் வட வலயத்தின் அனுசரணையுடன் டாக்டர் டி.ரி. நைல்ஸ் நினைவாக நடத்தும் பட்மின்ரன் போட்டியில் ஆண்களுக்கான இரட்டையர் ஆட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மதியம் ஒரு மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது எனப் போட்டி ஏற்பாட்டாளர் ஏ.மோகன் தெரிவித்துள்ளார். (3-190)




# தேசிய மட்ட வலைப்பந்தாட்டம்: யாழ். அணிகளும் பங்கேற்கின்றன

யாழ்ப்பாணம்,மார்ச்25

கொழும்பில் இன்று ஆரம்பமாகவுள்ள தேசிய மட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் யாழ். தெரிவு அணியின் வீர, வீராங்கனைகளின் பெயர் விவரங்கள் வெளியாகியுள்ளன.

இந்தச் சுற்றுப்போட்டிகள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் கொழும்பு ஸ்ரீமாவோ பாலிகா மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டியில் பங்குபற்றுவதற்கென வலைப்பந்தாட்டப் பயிற்றுநர் திருமதி எ.எவ்.ஜே.ரூபசிங்கம் தலைமையில் ஆண், பெண் அணியினர் நேற்று கொழும்பு புறப்பட்டுள்ளனர்.

ஆண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட ஆண்கள் அணி இம்முறை முதன்முதலாக பங்குபற்றுகின்றது.

இந்த அணிகளுடன் அணியின் முகாமையாளர் திருமதி ஜெயா சரவணபவ ஐயர், உதவிப் பயிற்றுநர் திருமதி பவானி அகிலன் ஆகியோரும் கொழும்பு சென்றுள்ளனர்.

போட்டிகளில் பங்குபற்றவுள்ள வீர, வீராங்கனைகளின் விவரம் வருமாறு:-

**பெண்கள் அணி**

நிலாந்தி பாலகிருஷ்ணன் (தலைவி), சியாமா சூடாமணி (உபதலைவர்), வாசுகி திருநாவுக்கரசு, தயாளினி செல்வராஜா, ஜெரால்டின் றெமின்டா யோன்விக்ரர், பிருந்தா சோமசுந்தரம், ஸ்ரீகாயத்திரி திருநாவுக்கரசு, மயூரி கந்தசாமி, வினோஜா எழில்மோகன், கௌசிகா சோமசுந்தரம், மயூதினி குணரட்ணம், பபித்தா வசந்தகுமார், மேனகா சிதம்பரநாதன், அஷாசந்திரிக்கா புவனேஸ்வரன்.

**ஆண்கள் அணி**

சூடாமணி அகிலன் (தலைவர்), இருதயநாயகம் சசிகுமார் (உபதலைவர்), செல்வராஜா ரமணன், மதிவதனன் மரியதாஸ், கனகரட்ணம் கனகராஜா, தங்கன் இன்பதாசன், ஆனந்தகிருஷ்ணன் கமலகுமார், புவனேஸ்வரன் டினேஸ்குமார், தேவராஜா திவாகர், காசிநாதர் பிரசாத், வடிவேலு செந்தூரன், பரராஜசேகரம் பார்த்தீபன். (3-190-203-202)

## இறுதியாட்டம்

வலி.மேற்கு,மார்ச்25

வலி.மேற்குப் பிரதேச செயலக பிரிவின் கழகங்களுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் வட்டு. தொழில்நுட்பக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் அராலி சில்வஸ்ரார் விளையாட்டுக் கழகமும் அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (3-175)

## மென்பந்து கிரிக்கெட்

வலி.மேற்கு,மார்ச்25

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகப் பிரிவின் கழகங்களுக்கு இடையேயான வருடாந்த விளையாட்டு விழாவின் இறுதிநாள் சிறப்பு நிகழ்ச்சியாக பிரதேச செயலக விளையாட்டுக் கழகத்துக்கும் சங்கானை ப.நோ.கூ. சங்க விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே மென்பந்து கிரிக்கெட் போட்டி நாளை பிற்பகல் 3 மணிக்கு பண்ணாகம் மெய்கண்டான் ம.வியில் நடைபெறவுள்ளது. (3-175)

# கிளிநொச்சி மாவட்ட சதுரங்கப் போட்டி: இராமநாதபுரம் ம.வி. 3 பிரிவுகளில் சம்பியன்

வட்டக்கச்சி,மார்ச்25

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையில் நான்கு பிரிவுகளாக நடைபெற்ற சதுரங்கப் போட்டிகளில் இராமநாதபுரம் மகாவித்தியாலயம் இரு பிரிவுகளில் சம்பியன்களாகின.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்ற இப்போட்டியில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய கோட்டங்களில் இருந்து தெரிவாகி ஒவ்வொரு பிரிவிலும் இரு அணிகள் வீதம் பங்குகொண்டன.

இப்போட்டியின் முடிவுகள் வருமாறு:-

**15 வயதுப் பிரிவு**

ஆண்கள் - இராமநாதபுரம் ம.வி., வட்டக்கச்சி ம.வி., இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை.


**19 வயதுப் பிரிவு**

ஆண்கள் - இராமநாதபுரம் ம.வி., கிளிநொச்சி ம.வி., வேரவில் இந்து ம.வி.

பெண்கள் - இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை, வட்டக்கச்சி ம.வி., கிளிநொச்சி மத்திய கல்லூரி.

பெண்கள் - வட்டக்கச்சி ம.வி., இராமநாதபுரம் ம.வி., ஜெயபுரம் அ.த.க. பாடசாலை.

இந்த அணிகளில் முதல் இரு இடங்களையும் பெற்ற அணிகள் வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெறவுள்ள போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தின் சார்பில் பங்குபற்றவுள்ளன. (3-405)



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் கல்லூரியின் அதிபர் வ.ஸ்ரீகாந்தன் கல்லூரிக் கொடி ஏற்றுவதையும் - நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.தனபாலசிங்கம் மற்றும் அவரது பாரியார் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (3-13)

# வாசகர் திருமுகம்

## ஆசிரியர்களின் நம்பிக்கைக்குரியவையாக தொழிற்சங்கங்கள் செயற்படுமா?

இன்றைய உலகில் பல்வேறுபட்ட தொழிற்சங்கங்கள் இயங்கி வருவதும் இவை சில சமயங்களில் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து நீதியான போராட்டங்களை நடத்தி வருவதும் யாவரும் அறிந்த விடயமே. இந்தப் போராட்டங்கள் வெற்றியை அடையலாம். அல்லது தோல்வியையும் தழுவிக் கொள்ளலாம். ஆனால், குறிப்பிட்ட போராட்டத்துக்கு தொழிற்சங்க அங்கத்தவர்கள் யாவரும் ஆத்மார்த்த ரீதியில் பூரண ஆதரவை வழங்கித் தமது ஒற்றுமைப் பலத்தை நிலைநிறுத்திக் காட்டுவதுதான் உலக வழமை. இந்தவகையில் கடந்த 16-03-2006 வியாழக்கிழமை குடாநாட்டில் இயங்கும் சில ஆசிரியர் தொழிற்சங்கங்களின் அழைப்பின்பேரில் ஆசிரியர்கள் சுகயீன லீவுப் போராட்டத்தில் ஈடுபட்டமை யாவரும் அறிந்ததே. இதற்கான அறிவிப்புகள் குடாநாட்டில் வெளிவரும் சகல செய்திப் பத்திரிகைகளிலும் முன்கூட்டியே பிரசுரிக்கப்பட்டு இருந்தன. குறிப்பிட்ட தினத்தில் ஆசிரியர்கள் பாடசாலைக்குச் செல்லாது சுகயீன லீவை அறிவிக்குமாறு ஆசிரியர் தொழிற்சங்க நிர்வாக சபையின் உயர் பதவியில் உள்ளவர்கள் குடாநாட்டு ஆசிரியர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

உண்மையில் நடந்தது என்ன?

பெரும்பாலான ஆசிரியர்கள் பாடசாலைக்குச் சென்று ஆசிரியர் வரவுப்புத்தகத்தில் கையொப்பமிட்டு அசிரியர்களிடம் இயல்பாகவே உள்ள சிறப்பியல்பான ஒற்றுமையின்மையை மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தியிருக்கின்றனர். இதில் வேடிக்கைக்குரிய விடயம் என்னவென்றால், குறிப்பிட்ட தொழிற்சங்கத்தின் அங்கத்தவர்களான பெரும்பாலான ஆசிரியர்கள் கூட தமது தலைமைத்துவத்தின் அறிவிப்பை உதாசீனம் செய்துவிட்டு பாடசாலைக்குச் சென்று குறிப்பிட்ட தினத்தில் வரவுப் புத்தகத்தில் கையொப்பமிட்டிருக்கின்றனர்.

இதற்குப் பல பக்கநியாயங்களும் ஆசிரியர்கள் தரப்பில் கூறப்படுகின்றது.

1) பாடசாலை உலகில் தமக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும் குறிப்பிட்ட சில அருட்கடாட்சங்கள் பறிபோய்விடுமோ என்று பெரும்பாலான ஆசிரியர்கள் பயப்படுகின்றமை.

2) ஆசிரியர் தொழிற்சங்கங்கள் மீது ஆசிரியர்கள் கொண்டுள்ள நம்பகத் தன்மை குறைந்து கொண்டு வருகின்றமை.

உண்மையில் ஆசிரியர் தொழிற்சங்கங்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையிலான இடைவெளியானது தற்காலத்தில் பல்வேறு காரணிகளால் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது என்பதை யாழ். கல்விச் சமூகம் நன்கு அறியும்.

ஆசிரியர் தொழிற்சங்கங்கள் மீது ஆசிரியர்கள் கொண்டுள்ள நம்பகத்தன்மை குறைந்து வருவதற்குக் காரணம் என்ன?

1) ஏனைய தொழிற்சங்கங்களுடன் ஒப்பிடும்போது ஆசிரியர் தொழிற்சங்கங்கள் மட்டுமே மிகக் கூடுதலான எண்ணிக்கையான அங்கத்தவர்களைக் கொண்டு இயங்குகின்றபோதிலும் அங்கத்துவ அடையாள அட்டைகள், அங்கத்துவ தொடர் இலக்கங்கள் என்பன ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவது இல்லை. வெறுமனே சம்பளப் பட்டியலில் (Pay-sheet) இருந்து அங்கத்துவப்பணம் கழிக்கப்படுவதன் மூலம் மட்டுமே தொழிற்சங்கங்களில் ஆசிரியர்களின் அங்கத்துவம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

2) தொழிற்சங்கத்தின் அலுவலகம் அமைந்துள்ள இடம்,அலுவலக நேரம் என்பன அங்கத்துவம் வகிக்கும் ஆசிரியர்களுக்கு அறிவிக்கப்படுவது இல்லை.

அத்துடன் கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் ஆசிரியர்களுக்கு அநீதிகள் இழைக்கப்படும்போது குறிப்பிட்ட தொழிற்சங்கங்கள் வாய்மூடி மௌனியாக இருந்ததன் மூலம் 'நல்ல பிள்ளை' என்ற பெயரை எடுத்துள்ளது என்பது யாரும் மறக்கமுடியாத உண்மை ஆகும்.

* தனியார் கடை ஒன்றில் சாமான் நிறுக்கும் கடைச்சிப்பந்திக்கு கூட ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள். ஆனால், ஆசிரியர்கள் மட்டுமே ஞாயிற்றுக்கிழமைகளிலும் செயலமர்வுகள், போட்டிகள் என்று பல்வேறு பட்ட வகைகளில் கடமைக்கு அழைக்கப்படுகின்றனர். ஆத்ம திருப்தியுடன் ஞாயிற்றுக்கிழமைகளிலும் தமது கடமையைச் செய்கின்றனர். ஆனால், வெகுமதியாகக் கிடைப்பது அதிகாரத் திமிருடன் கூடிய அதட்டல்களும் மிரட்டல்களும் தான். இதற்குத் தொழிற்சங்கங்கள் கூறும் பதில்தான் என்ன?

* ஆசிரியர்களின் வாண்மைவிருத்திக்காக சனி, ஞாயிறு என்று பாராது செயலமர்வுகள் நடத்தி அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கும் கடமையுணர்ச்சியானது ஆசிரியர்களின் பதவி உயர்வு என்ற நிலை வரும்போது வேண்டா வெறுப்பாகவே நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

உதாரணமாக ஆசிரியர்களின் பதவி உயர்வுடன் தொடர்புடைய அதிபர் தெரிவுப் போட்டிப் பரீட்சை, இலங்கை கல்வி நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சை போன்ற விடயங்களில் தமிழ்மொழிமூல ஆசிரியர்களுக்கு அநீதிகள் இழைக்கப்படும்போது குறிப்பிட்ட தொழிற்சங்கங்கள் மௌனமாக இருந்ததன் காரணம் என்ன?

* வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஆயிரக்கணக்கான தமிழ்மொழி மூலப் பாடசாலைகள் இருந்தபோதிலும் இறுதியாக 1990ஆம் ஆண்டு நடைபெற்ற அதிபர் தெரிவுப் போட்டிப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் குடாநாட்டில் இரண்டு தமிழர்களுக்கு மட்டுமே அதிபர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

* வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2000ஆம் ஆண்டிலும் 2002ஆம் ஆண்டிலும் நடத்தப்பட்ட இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு (S.L.E.A.S.) ஆள்சேர்ப்பதற்கான போட்டிப்பரீட்சைகளின் பெறுபேறுகள் இதுவரை வெளியிடப்படவில்லை.

மேற்படி விடயங்களில் ஆசிரியர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் தொழிற்சங்கங்கள் எடுத்த நடவடிக்கைதான் என்ன?

ஆகவே, எதிர்காலத்திலாவது ஆசிரியர்களின் நம்பிக்கையை அதிகரிக்கும் வகையில் தொழிற்சங்கங்களின் செயற்பாடுகளில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

யாழ்ப்பாணம்.

- ஓர் ஆசிரியர்.

## சுழிபுரம் பறாளாய்ப் பகுதி வயல்களில் சிறுதானியச் செய்கை ஆரம்பம்

சுழிபுரம், மார்ச் 25

சுழிபுரம் மற்றும் பறாளாய் வயல்களில் நெல் அறுவடையைத் தொடர்ந்து சிறுதானியப்பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எள்ளு, பயறு, சணல் ஆகிய சிறுதானியங்கள் இவ்வாறு விதைக் கப்பட்டுள்ளன.

இடைஇடையே பெய்து வரும் மழை சிறுதானிய விதைப்புக்கு ஏற்றதாக அமைந்துள்ளதால் சிறுதானியச் செய்கை மூலம் நல்ல பயன் கிடைக்கும் என தாம் எதிர்பார்ப்பதாக விவசாயிகள் தெரி வித்தனர்.

குறிப்பாக சுழிபுரம் பகுதியிலுள்ள சகல வயல் நிலங்களிலும் சிறுதானிய விதைப்பு இடம் பெற்றுள்ளது. (எ-28)

## வீடு கையளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச்25

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட ஆதிகோயிலடிப் பகுதி மக்க ளுக்கு கெயர் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட வீடுகள் கையளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆதிகோயிலடியில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஸ் கலந்துகொள்வார். (எ-204)

## யாழ்.மத்திய கல்லூரியில் முதலுதவி நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச்25

யாழ்.மத்திய கல்லூரியின் பரியோவான் முதலுதவிப் படையணியின் முதலுதவி நிலையத் திறப்புவிழா நேற்று முன் தினம் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் செ. பத்மநாதன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரதம தளபதி டாக்டர் ஜே. ஜி. ஜெயத்திலக நாடவெட்டி முதலுதவி நிலையத்தைத் திறந்து வைத்தார்.

சிறப்பு விருந்தினர்களாக ஸ்ரீ பன்ரைக், திருமதி பியற்மாஸ், மற்றும் யாழ். மாவட்ட ஆணையாளர் செ.செல்வரஞ்சன் ஆகியோர்கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில், பரியோவான் முதலுதவிப் படையணியின் உறுப்பினர்கள், ஆசிரியர்கள் ஆகியோர்கலந்து கொண்டனர். (எ-190)

## வலி. தென்மேற்கில் மத்தியஸ்தர் சபை

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மத்தியஸ்தர் சபை உருவாக்கப்படவுள்ளது.

வலி.தென்மேற்கில் உள்ள 28 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 23 மத்தி யஸ்த உறுப்பினர்கள், நீதி, சட்டமறு சீரமைப்பு, தேசிய ஒருங்கிணைப்பு அமைச் சினால் நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவாகியுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கற்கை நெறி வலி.தென் மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தற்போது நடைபெற்றுவருகிறது.

பயிற்சி முடிவுற்ற பின்னர் முறையான நியமனக் கடிதங்கள் நீதி, சட்ட மறு சீரமைப்பு தேசிய ஒருங்கிணப்பு அமைச் சினால் வழங்கப் படும் எனக்கூறப்பட்டது. (எ-185)

## உணவு முத்திரைகள் வழங்கப்படுகின்றன

தெல்லிப்பழையிலிருந்துஇடம்பெயர்ந்து ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் பிரிவில்தங்கியிருப்பவர்களுக்கான உணவு முத்திரைகள் தற்போது அப்பகுதி கிராம சேவையாளரினால் வழங்கப்பட்டு வருகின்றது. (த-100)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18.10.1952

மறைவு 29.03.2003

**திருமதி தம்பித்துரை சந்திராதேவி**

(திதி: ஏகாதசி 25.03.2006)

பரிவோடு எம்மை வளர்த்து
பாசமாய் அரவணைத்த கைகள்
காலமெல்லாம் எமை விட்டுப்
போனதேனோ?.........
கண்ட கனவுகள் நனவாகும் முன்னே
காலனவன் சடுதியாய் அழைத்தானோ!
உங்கள் இனிய முகம் காணாது
வாடுகின்றோம் இப்புவியில்.

ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

பாசமுடன்:
பிள்ளைகள், மருமக்கள்.

(48494) (39.26.16.11)

சிவமயம்



வவுனியா, கோவிற்குளம்
அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர்
திருக்கோயில்

## மகோற்சவ விஞ்ஞாபனம்

பங்குனி 14 ஆம் நாள் (28.03.2006) செவ்வாய் பகல்:-
12 மணிக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்)
இரவு:- விநாயகர் யாகாரம்பம்

பங்குனி 27 ஆம் நாள் (10.04.2006) திங்கள் பகல்:-
ரதோற்சவம் (தேர்த்திருவிழா)
இரவு:- திருவீதி உலா.

பங்குனி 28 ஆம் நாள் (11.04.2006) செவ்வாய் பகல்:-
தீர்த்தோற்சவம், யாக கும்ப அபிஷேகம்.

**ஆலய அறங்காவலர் சபை.**

## திறப்பு விழா

26-03-2006 மாலை 3.30

## OPENING CEREMONY

26-03-2006 at 3.30P.M.

## INTERNATIONAL SCHOOL MANIPAY

Sangarapillai Road Manipay

சர்வதேச பாடசாலை மானிப்பாய்

சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்



# 4 ஏக்கரில் விளைந்த நெற்கதிர்களை ஒரே இரவில் ஏப்பம்விட்ட யானைகள்!

## பல்லவராயன்கட்டில் சம்பவம்!

வெள்ளாங்குளம்,மார்ச் 25

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பல்லவராயன் கட்டு கிராமத்தில் கனகசபை என்பவருக்குச் சொந்தமான 4 ஏக்கரில் விளைந்த நெற்கதிர்கள் அறுவடைசெய்து சூடு மிதிப்பதற்காக அடுக்கிவைக்கப்பட்டிருந்தபோது காட்டு யானைகளால் நாசமாக்கியிருக்கின்றன.

இந்தச் சம்பவத்தினால் 4 ஏக்கர் வயலில் விளைந்திருந்த நெற்பயிர்கள் முற்றுமுழுதாக அழிவடைந்தன. இதுகுறித்துத் தெரிய வருவதாவது:-

சம்பவதினம் இரவு வேளையில் வயலில் கொட்டகை அமைத்துக்காவல் காத்து படுத்திருந்தார் வயலின் சொந்தக்காரர். அப்போது நள்ளிரவுவேளை திடீரெனக்கூட்டமாக அந்த வயலுக்குள் யானைகள் நுழைந்தன. சத்தம் கேட்டு விழித்துக்கொண்ட வயல் உரிமையாளர் யானைகள் கூட்டமாக நிற்பதைக் கண்டதும் அங்கிருந்து ஓடிவிட்டார்.

சூடடிப்பதற்குத் தயாரான நிலையில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த 4 ஏக்கர் நெற்கதிர்களைச் சிறிதளவும் மிச்சம் இல்லாமல் யானைகள் மேய்ந்து விட்டுச்சென்றுவிட்டன.

மிகவும் சிரமப்பட்டு மழை, வெயில் பாராது பாடுபட்டு, பெருமளவு பணத்தை செலவழித்து வளர்த்த நெற்பயிர்கள் ஒரே இரவில் யானைகளால் துவம்சம் செய்யப்பட்டிருப்பதையிட்டு வயல் உரிமையாளர் மிகவும் கவலையடைந்துள்ளார்.

யானைகளால் தமக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு நட்டஈடு பெற்றுத்தருமாறும் அவர் சம்பந்தப்பட்ட அனைவரிடமும் கேட்டுள்ளார். (த-415)



யானைகளால் நாசமாக்கப்பட்ட நெற்சூடு அடுக்கி வைக்கப்பட்டிருந்த வயலில் உரிமையாளர்.

# 'நீடோ' நிறுவனத்தின் தொழில் பயிற்சிகள்

துணுக்காய் பிரதேசத்தில் 'நீடோ' நிறுவனத்தால் புதிய தொழில்சார் பயிற்சிநெறி கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. அலுமினியப் பொருத்துதல் பயிற்சி மல்லாவியிலும் குழாய் பொருத்தல் பயிற்சி துணுக்காயிலும் மேசன் வேலை மற்றும் மரவேலைப் பயிற்சி ஆகியன ஐயன்கன்குளத்திலும் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சி நெறிகள் ஒவ்வொன்றும் 6 மாதகாலம் நடைபெறும் என்றும் பயிலுநர்களுக்கு நாள்தோறும் 200 ரூபா வீதம் உதவு தொகை வழங்கப்படும் என்றும் பயிற்சி யைச் சிறப்பாக நிறைவுசெய்யபவர்களுக்கு தொழில்சார் உபகரணங்கள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி நெறிகளில் இணைந்து கொள்ள விரும்புவோர் உடனடியாக 'நீடோ' நிறுவனத்துடன் அல்லது துணுக்காய் உதவி அரச அதிபர் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (த-322)

# காடுமண்டிக் கிடக்கிறது புதுக்குடியிருப்பு மயானம்

## புனரமைக்குமாறு மக்கள் வேண்டுகோள்

புதுக்குடியிருப்பு,மார்ச்25

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் பழைமையானதும் பிரபலமானதுமான ஒரு மயானம் உண்டு. அது இப்போது கவனிப்பார் அற்று காடுமண்டிக் கிடக்கிறது. உடலை எரிக்கும் இடம் தவிர்ந்த ஏனைய பகுதிகள் பெரும் பற்றைகளாக உள்ளன. இப்பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வசிக்கின்றன.

இப்பகுதியைச் சூழ 10 கிராமங்கள் உள்ளன. ஒவ்வொரு கிராமத்திற்கும் தனித்தனியாக கிராம அபிவிருத்திச் சங்கங்கள் உள்ளன. அவர்கள் எவரும் இதனைக் கவனிப்பதில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

புதுக்குடியிருப்பு - மாத்தளன் பிரதான வீதியில் ஒரு கிலோமீற்றர் தூரத்தில் வீதி ஓரத்தில் இச்சுடலை உள்ளது. இது ஒரு பிரதான வீதியாகும். வீதியின் அருகில் அமைந்திருந்தாலும் சுடலைக்குச் செல்வதற்குப் பாதை இல்லை. வீதியின் இரு பக்கமும் ஐந்து அடி ஆழமான வடிகால் வெட்டப்பட்டுள்ளது. இதனைக் கடந்து செல்வதற்கு மதகோ அல்லது பாலமோ இல்லை.

பிணத்துடன் வருபவர்கள் பெரும் சிரமத்துடன் இதனைக் கடக்கவேண்டி உள்ளது. விறகுகள் அத்துடன், வீதி ஓரத்தில் பறிக்கப்பட்டே சுடலைக்கு எடுத்துச்செல்லப்படுகின்றன. மழை காலங்களில் சுடலைக்குச் செல்வது மிகவும் கடினம். வாய்க்காலினால் நீர் நிறைந்து ஓடுவதனால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். எனவே, இதுவிடயத்தில் உரிய தரப்பினர் அக்கறை கொண்டு இதனை விரைவில் புனரமைக்க்வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர். (த-353)

# துணுக்காய் கூ.சங்கப் பிரிவில் மார்கழி மாத நிவாரணம் இல்லை

## 2,500 குடும்பங்கள் இதனால் பாதிப்பு

மல்லாவி,மார்ச்25

துணுக்காய் பகுதி ப.நோ.கூ. சங்கத்தால் 2005 மார்கழி மாதத்திற்கான இடம்பெயர்ந்தோரின் நிவாரணம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இடப்பெயர்வின் காரணமாகப் பல்வேறு வகையான அவலங்களைச் சந்தித்த மக்கள் தமக்குரிய நிவாரணப் பொருள்கள் உரிய காலத்தில் வழங்கப்படாமையால் பெரும் அவலநிலையை அடைந்துள்ளார்கள். பல்வேறு பகுதிகளிலும் இருந்து இடம்பெயர்ந்து துணுக்காய் ப.நோ.கூ. சங்கத்தின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 2 ஆயிரத்து 456 குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன.

வழமையாகவே இந்த ப.நோ.கூ. சங்கத்தில் உரிய காலங்களில் நிவரணம் வழங்கப்படுவதில்லை என்றும் 2005 மார்கழி மாதத்தின் கடைசிப் பகுதியிலே 2005 ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதத்திற்கான முத்திரைகள் வெட்டப்பட்டு ஐப்பசி மாத நிவாரணம் மட்டும் வழங்கப்பட்டது. பின்னர் 2006 தை மாதத்தில் கார்த்திகை மாத நிவாரணம் மட்டும் வழங்கப்பட்டது.

இவ்வாறு முத்திரை வெட்டப்பட்ட நிலையிலும் தமக்குரிய நிவாரணப் பொருள்கள் வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்படுவதால் மக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர் என விசனம் தெரிவிக்கப்படுகிறது. (த-322)

# கோட்டைகட்டியகுளத்தில் தையற்பொருள் கண்காட்சி

மல்லாவி,மார்ச்25

உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் துணுக்காய் உதவி அரசஅதிபர் பணிமனையால் கோட்டைகாட்டியகுளம் கிராமத்தில் நடத்தப்பட்ட தையற்பயிற்சிநெறியின் நிறைவு விழாவும் கண்காட்சியும் விற்பனையும் கடந்த 5ஆம் திகதி கோட்டைகட்டியகுளம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

தையற்பயிற்சி நெறியின் போதனாசிரியர் செல்வி குமுதமலர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வை, கோட்டைகட்டியகுளம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இலட்சணேஸ்வரன், கிராமசேவகர் இராசரத்தினம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தனர்.

கண்காட்சி மண்டபத்தினை துணுக்காய் பிரதேச செயலர் நா. நந்தகுமார் நாடாவை வெட்டி திறந்துவைத்தார்.

பயிற்சியை நிறைவுசெய்த பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ்களை தென்னியங்குளம் அ.த.க. பாடசாலை அதிபர் திருமதி இரத்தினகுமார், போதனாசிரியர் செல்வி குமுதமலர் ஆகியோர் வழங்கினர். (த-322)




பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முழங்காவில் அன்புபுரம் இளநிலா குடியிருப்பு, லாலா குடியிருப்பு போன்ற பிரதேசங்களில் கால்நடை வளர்ப்போருக்கான கருத்தூட்டல் நிகழ்வு சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் நிதி உதவியுடன் நடத்தப்பட்டது.

இதில் கால்நடை போதனாசிரியர் சூரியகுமார் விளக்கவுரை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

(படம்: ச.உ.தயசங்கர், வெள்ளாங்குளம் செய்தியாளர்)

# முழங்காவில் வைப்பகக் கிளை புதிய கட்டடத்தில்

வெள்ளாங்குளம்,மார்ச்25

முன்னார், முழங்காவிலில் இயங்கிவந்த தமிழீழ வைப்பகத்தின் ஊரகக் கிளை நாளை மறுதினம் 27ஆம் திகதி முதல் நாச்சிக்குடா சந்தியில் புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளது. அன்று தொடக்கம் இந்த ஊரகக் கிளை முதன்மைக் கிளையாக மாற்றம் செய்யப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-415)

# மல்லாவி மத்திய கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றுகூடல்

மல்லாவி,மார்ச்25

மல்லாவி மத்திய கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் வருடாந்த ஒன்றுகூடல் கடந்த 19ஆம் திகதி நடைபெற்றது.

உயர்தர மாணவர் மன்றத் தலைவர் மு.துசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.குரூஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார். (த-322)

# நியாப் II திட்டத்தில் குளங்கள் புனரமைப்பு

மல்லாவி,மார்ச்25

மல்லாவி பகுதியிலுள்ள அனிஞ்சியன் குளம், ஆலங்குளம் ஆகிய குளங்கள் நியாப் II திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் அனிஞ்சியன்குளம் புனரமைப்பிற்கென 24 லட்சத்து 45 ஆயிரம் ரூபாவும் ஆலங்குளம் திருத்தத்திற்கு 30 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன. (த-322)

# கிராமப்புற மதுபானசாலைகளை அகற்றுமாறு கோரித் தீர்மானம்

மல்லாவி,மார்ச் 25

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் கிரலமப்புறங்களில் இயங்கும் மதுபானசாலைகளை அகற்ற வேண்டும் என துணுக்காய்ப் பிரதேச சுற்றாடற் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

துணுக்காய் உதவி அரச அதிபர் நா. நந்தகுமார் தலைமையில் கடந்த 16ஆம் திகதி துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற சுற்றாடல் குழுக்கூட்டத்தில் கிராமப்புறங்களில் இயங்கும் மதுபானசாலைகளால் சமூகத்திற்கு ஏற்படும் அசௌகரியங்கள் குறித்து ஆராயப்பட்டது.

இதனடிப்படையில் இந்த மதுபானசாலைகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவற்றை நடத்துபவர்களிடம் கோருவது எனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (த-322)

# துணுக்காய் பிரதேசத்தில் இடிதாங்கி அமைக்குமாறு மக்கள் கோரிக்கை

மல்லாவி,மார்ச்25

துணுக்காய் பிரதேசத்தில் இடி தாங்கி இல்லாத காரணத்தால் ஆண்டுதோறும் மழை காலத்தில் மின்னல் தாக்கி உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. இந்த நிலைமை தொடர்வதைத் தவிர்க்க துணுக்காய் பகுதியில் பொருத்தமான இடத்தில் இடிதாங்கி ஒன்றை நிறுவுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச திட்டமிடல் அபிவிருத்திக் கூட்டத்தில் இக்கோரிக்கை பற்றி கலந்துரையாடப்பட்டது. பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின்கீழ் இப்பகுதியில் இடிதாங்கி ஒன்றை நிறுவுமாறு அரசாங்கத்தை கோருவது எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (த-322)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

| பெற்ற தாய் மடியில் | | சீரணி அன்னை மடியில் |
|---|---|---|
| 05 - 02 - 1950 | | 23 - 02 - 2006 |



அமரர்

## அரசகுலசிங்கம் புலேந்திரன்

அன்பின் திருவுருவே பண்பின் சிகரமே பாசத்தின் கங்கையே எம்மை வளமாக்க உங்களையே தியாகம் செய்தீர்கள். எல்லாக் கடமைகளையும் குறைவின்றி நிறைவேற்றி கற்பூரமாகக் கரைந்து எம்மை உத்தம வழியில் வாழ்வாங்கு வாழ வைத்த என் அன்புத் தெய்வமே! நீங்கள் சீரணித் தாயின் திருவடி சேர உறுதியாக நம்பி தொழுது நிற்கின்றோம். எங்கள் உள் உணர்வில் நீங்கள் நின்று எங்களை விழி நடத்துங்கள். உங்கள் அன்பு திருமுகம் எங்கள் உள்ளத்தி.ல் என்றும் நிலைத்திருக்க.

*டச்சு வீதி,*
*சண்டிலிப்பாய்.* (48505)(26.16.11)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| *20 - 07 - 1919* | | *23 - 02 - 2006* |



## அமரர் கந்தையா இரத்தினம்

**உற்ற உறவுகள் யாவர்க்கும் ஐயா நீர்**
**இன்னல் நீக்கும் இனிய உறவானீர்**
**சுற்றம் சுருதி இழந்து தவிக்க ஐயா நீர்**
**விண்ணுலகம் சென்றீரோ?**

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (48497)(26.16.11)

-குடும்பத்தினர்.

# கூட்டங்கள்

யாழ். மத்திய கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

* * *

யாழ். சைவ பரிபாலன சபையின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நீராவி யடி நாவலர் ஆச்சிரமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(202)

* * *

பெரியபுலம் மகாவித்தியாலய பழைய மாணாக்கர் அவையின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.






இலங்கை அரசு
வடக்கு-கிழக்கு மாகாண சபை
வடக்கு-கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்
கடன் இல: 2880 சி.இ.
தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்
(நிர்மாண வேலைகள்)

# கேள்வி அறிவித்தல்

ஐ.எவ்.பி.இல.ஜே.எவ்.நீர்ப்-II/01 திகதி: 25.03.2006

1) வடக்கு -கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக சர்வதே அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.
ஐ.பி.ஆர்.டி (IBRD) கடன் வசதி ஐ.டி.எ.(IDA) நம்பிக்கையின் கீழான வசதி
2) மாவட்ட செயலாளர், யாழ்ப்பாணம், இலங்கை அவர்களினால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து பின்வரும் கட்டடத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்றன.
3) மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1000/- ஐ காசாகவோ அல்லது யாழ்ப்பாணத்தில் மாற்றத்தக்கதான யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) சமர்ப்பிப்பதன் பேரில் பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் அவர்களிடமிருந்து 24-04-2006 ஆம் திகதி 15 மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
4) ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் பிரதம பொறியியலாளர் (கட்டடங்கள்) யாழ்ப்பாணத்தில் இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விவரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம பொறியியலாளர்
கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்),
கடற்கரைவீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி/தொலைநகல் இல.021-2222632

5) சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்தில் இருந்து 90 நாள்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும், அத்துடன் யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு, அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், கச்சேரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 26-04-2006 ஆம் திகதி 15 மணிக்கு முன்னர் கையளிக்கப்படல் வேண்டும். அதேதினம், கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலைநாளன்று அதே யிடத்தில் அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டுத் திறக்கப்படும்.
6) வேறு விவரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

**விவர அட்டவணை**

| கேள்விக் குறியீடு | வேலை விவரம் | கேள்விப் பிணை ரூபா | கேள்வி ஆவணங்களின் பெறுமதி ரூபா | வேலை முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| ஜே.எவ்.நீர்ப்-II/டிஸ்/05 | வேலணை பிரதேச செயலக கட்டட விரிவாக்கம் | 1000.00 | 120,000.00 | 04 மாதங்கள் |
| ஜே.எவ்.நீர்ப்-II/எவ்சீசீ/01 | மீன்பிடி கூட்டுறவு கிராமிய வங்கி நிர்மாணித்தல், யாழ்ப்பாணம் | 1000.00 | 67,000.00 | 04 மாதங்கள் |

6) கேள்விதாரர்கள், கேள்விதார்ருக்கான செயற்பிரமாணக் குறிப்புகள் 4ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக்குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால்ஆலோசனை வழங்கப்படுகின்றது.

**க.கணேஷ்,**
*அரசாங்க அதிபர்,*
*மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.*

(சி/48506)(26:16.11)

# United Nations Development Programme

The UNDP Mine Action Project, a Project of UN Support to Mine Action in Sri Lanka, has the following vacancies:

The Post of Administration and Finance Assistant (Na[illegible]al Position) to be based in Jaffna.

## UNITED NATIONS DEVELOPMENT PROGRAMME

Position of administration and Finance Assistant (National Position), JAFFNA

**The duties and responsibilities of the Administration and Finance Assistant (National Position), Jaffna are as follows:**

The Administration and Finance Assistant will be responsible to the Jaffna District Mine Action Officer. Specific duties will be: The Administration and Finance Assistant will be responsible to the Mine Action Officer, Jaffna. Specific duties will be:

- to support the District Mine Action Office (DMAO) Jaffna;
- to maintain the DMAO administration and filing system and all correspondence;
- to maintain and update the inventory of all non expendable items;
- to maintain administrative control of all consumable items;
- to maintain all relevant Human Resources records;
- to act as focal point for contact with the DMAO; and
- use the HF and VHF radios in accordance with UN guidelines;
- other duties as required by either the Mine Action Officer, Administration Officer or the Technical Advisor

**Educational Background:**

__Experience:__

- educated to A level standard;
- minimum of 2 years clerical experience in administration, finance and logistics procedures:
- flexibility in undertaking any assignment allocated by the MAO;
- competent and experienced in the Microsoft Office computer package;
- have good command of verbal and written English and Tamil; and
- be physically fit.
- hold a valid Sri Lankan driving license.

__Others:__

- Knowledge in Sinhala language is an advantage.
- Willing to travel for training if required;
- Possess good work habits with a willingness to work in a multi-cultural environment;
- Flexible and adaptable to any situation;
- Be in good health.

__Duration:__ Initially for six months with probable extensions.
__Duty Station:__ Jaffna.

Qualified candidates are invited to send an updated CV containing, accurate and update contact detail's (phone, mobile, fax contact numbers and mail address), detail of educational and professional qualifications and work experience with the names of two, non-related referees and a contact telephone number during working hours, to be received on or before 2pm on the 30th March 2006. The position offers an attractive remuneration package. Applications should be **"Clearly Addressed"** to the Mine Action Technical Advisor, UNDP Mine Action Project, Jaffna District Secretariat.

**N.B. Short-listed candidates will be notified by telephone to attend an interview in Jaffna and the UNDP Mine Action Office located in the Jaffna District Secretariat on or about the 4th April 2006.**

(C/48462)

## கனடா கரையில் பயணிகள் படகு கவிழ்ந்தது

வான்கூவர்,மார்ச்25

கனடாவில் பசுபிக் கடற்கரை அருகே 100இற்கும் மேற்பட்ட பயணிகளோடு சென்ற பெரிய படகு ஒன்று கடலில் இருந்த பாறையில் மோதி மூழ்கியது. படகில் இருந்த 99 பயணிகள் மீட்கப்பட்டதாக மீட்புப் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கனடாவில் வட மேற்கு பசுபிக் கடற்கரை அருகே உள்ள பிரிட்டிஷ் கொலம்பியாவை நோக்கி ஒரு படகு 100இற்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிக்கொண்டு புறப்பட்டது.

தீவு அருகே சென்றபோது பாறை ஒன்றின் மீது படகு மோதி விபத்துக்குள்ளானது. படகிற்குள் தண்ணீர் புகுந்து மெதுவாகக் கடலுக்குள் மூழ்கத் தொடங்கியது. இதையடுத்து, படகில் இருந்த பயணிகள் மரண ஓலமிட்டனர்.

பயணிகளின் கூக்குரலைக் கேட்டு அருகே இருந்த ஹார்ட்லி பே கிராம மக்கள் உடனடியாகப் படகுகளை எடுத்துக்கொண்டு கடலுக்குச் சென்றனர்.

சில பயணிகளைக் காணவில்லை. இந்த விபத்தில் 11 பயணிகள் வரை இறந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. (ஐ)

# கார்க் குண்டுத் தாக்குதலில் ஈராக்கில் 30 பேர் உயிரிழப்பு!

### பயங்கரவாத ஒழிப்புப் பிரிவு மீது இலக்கு

பக்தாத்,மார்ச்25

ஈராக்கில் கர்ரடா பகுதியில் அமைந்துள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அலுவலகம் மீது நடத்தப்பட்ட ஒரு கார்க் குண்டுத் தாக்குதலில் பொலீஸார் உட்பட முப்பதுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

பயரங்கரவாத ஒழிப்புப் பிரிவின் தலைமையகக்க கட்டத்துக்கு வெளியே வெடிகுண்டு ஏற்றிய கார் மூலம் இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

தாக்குதல் நடந்த யோடு அதிகாரிகள் அந்தப் பகுதியை மூடி 'சீல்' வைத்தனர். காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு விரையப்பட்டனர். (ஐ)

## சீன அதிபர் அமெரிக்கா செல்கிறார்



வாஷிங்ரன்,மார்ச்25

சீன அதிபர் ஹூ ஜிண்டவோ ஏப்ரல் மாதத்தில் அமெரிக்க சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அவரை வரவேற்க அதிபர் புஷ் தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சீன அதிபர் ஹூ ஜிண்டவோ ஏப்ரல் 20ஆம் திகதி முதல் அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார். அன்றைய தினம் அவரை வெள்ளை மாளிகையில் வரவேற்க அதிபர் புஷ் தயாராக இருக்கிறார். இரு நாடுகளுக்கு இடையேயான உறவு, சர்வதேச பிரச்சினைகள், தீவிரவாதத்துக்கு எதிரான போர், அணு ஆயுத பரவல் தடை உட்பட பல விஷயங்கள் குறித்தும் இரு தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்துவர் என வெள்ளைமாளிகை சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## சோமாலியாவில் மோதல்கள்

சோமாலியத் தலைநகர் மொஹடிசுவில் கடந்த சில தினங்களாக இடம்பெற்றுவந்த கலவரங்களை அடுத்து நூற்றுக்கணக்கான குடும்பங்கள் அந்த நகரை விட்டு வெளியேறி வருகின்றன. இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கும் யுத்தப் பிரபுமாருக்கும் இடையே அங்கு மோதல்கள் வெடித்துள்ளன.

இந்த மோதல்களில் சிக்கி 60 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். நகரில் உள்ள மருத்துவமனை காயமடைந்தவர்களால் நிரம்பி வழிகின்றது. (ஐ)

# எம்.பி. பதவியைத் துறந்தார் சோனியா!



ராஜினாமாவை நிருபர்களிடம் தெரிவிக்கிறார்.

புதுடில்லி,மார்ச்25

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வருமானம் தரும் வேறு ஒருபதவியை வகிக்கலாமா என்பது தொடர்பாக எழுந்த சர்ச்சையை அடுத்து இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவி திருமதி சோனியா காந்தி தமது எம்.பி.பதவியையும் வருமானம் பெறும் மற்றொரு பதவியையும் ராஜினாமா செய்துவிட்டார்.

அவரது இந்த ராஜினாமா இந்தியாவின் தேசிய அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதன் மூலம் ஒருவரே இரண்டு பதவிகளில் நீடிக்கும் விவகாரத்தில் அடுத்தடுத்து பல திருப்பங்கள் நிகழ்ந்து வருகின்றன. எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பை முறியடிக்க சோனியா எடுத்த இந்த முடிவால் மத்திய அரசுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. சோனியாவைப் போல் இரட்டை பதவிகள் வகிக்கும் 40இற்கும் மேற்பட்ட எம்.பிக்களின் கதி என்ன, அவர்களுக்கும் சிக்கல் ஏற்பட்டால் மத்திய அரசு கவிழும் அபாய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. லோக்சபா மற்றும் ராஜ்யசபா எம்.பிக்கள் மற்றும் மாநில அளவில் எம்.எல்.ஏக்கள் கூடுதலாக மற்றோர் அரச பதவியில் இருப்பது வழக்கமான ஒன்று. இதற்கு எந்தக் கட்சியும் விதி விலக்கு இல்லை. பொலிவுட் நடிகர் அமிதாப் பச்சனின் மனைவியும் சமாஜ்வாதி கட்சியின் ராஜ்ய சபா எம்.பியாகவும் இருந்த ஜெயா பச்சன் உத்தரப் பிரதேச மாநில திரைப்பட வளர்ச்சி வாரியத் தலைவர் பதவியில் இருந்தார்.

இதனால், ஜெயா பச்சனின் ராஜ்யசபா எம்.பி. பதவியை பறிக்கவேண்டும் என ஜனாதிபதியிடம் புகார் மனு அளிக்கப்பட்டது. தேர்தல் ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் ஜெயா பச்சனை எம்.பி பதவியில் இருந்து ஜனாதிபதி கலாம் நீக்கினார். இதையடுத்து தேசிய அரசியலில் பெரும் திருப்பம் ஏற்பட்டது.

காங்கிரஸ் தலைவர், தேசிய ஆலோசனை கவுன்சில் தலைவர் பதவி வகித்துவந்தார். மத்திய அமைச்சர் அந்தஸ்துக்கு இணையாக இந்தப் பதவி கருதப்பட்டது. லோக்சபா எம்.பியாக இருக்கும் அவர் ஆதாயம் தரும் மற்றொரு பதவியில் இருப்பதால் ஜெயா பச்சன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை போல் அவர் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பா.ஜ., சமாஜ்வாதி உட்பட எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின.

இந்தச் சூழ்நிலையில், சோனியாவின் எம்.பி. பதவியைக் காப்பாற்ற மத்திய அரசு அவசர சட்டம் கொண்டுவர முற்பட்டது. ஆதாயம் தரும் பதவி என்ற வரம்பில் இருந்து சோனியா வகித்து வரும் பதவி உட்பட பல பதவிகளுக்கு விலக்கு அளிக்கவே இந்த அவசர சட்டம் கொண்டுவரப்பட உள்ளதாக நேற்றுமுன்தினம் தகவல் வெளியானது. இதனால் ராஜ்யசபா மற்றும் லோக்சபாவில் எதிர்க்கட்சி எம்.பிக்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர். பலமுறை ஒத்திவைக்கப்பட்ட இரு சபைகளும் இறுதியாக நேற்றுமுன்தினம் மாலை காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டன. (ஐ)

# சோனியா விலகல்: தியாகமா? தப்பிக்கும் முயற்சியா?



நடந்ததென்னவோ இதுதான்! மாநிலங்களவை உறுப்பினர் பதவியை நடிகை ஜெயா பச்சனிடமிருந்து பறித்ததால், மக்களவை உறுப்பினர் பதவியை மட்டுமல்லாது தேசிய ஆலோசனைக் கவுன்சில் (என்.ஏ.சி) தலைவர் பதவியையும் சேர்த்து ராஜினாமா செய்ய நேரிட்டுவிட்டது சோனியா காந்திக்கு.

ஜெயா பச்சனுக்கு நேர்ந்த அவமானம் தனக்கு நேராமல் தடுத்துவிட்டார். ஆனால், அதற்கு முன்னால் சட்டத்தை வளைக்கவும் உடைக்கவும் ஒரு முயற்சி செய்துபார்த்தார்.

உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த அவ்வளவாக பிரபலமாகாத ஒரு காங்கிரஸ்காரர் மாநிலங்களவை உறுப்பினரான ஜெயா. பச்சன் மீது ஒரு புகாரைக் குறிப்பிட்டு அதை குடியரசுத் தலைவரின் பார்வைக்கு அனுப்பினார். அதில்,உத்தரப் பிரதேச திரைப்பட வளர்ச்சி சபை என்ற அமைப்பின் தலைவராக ஜெயா பச்சன் இருப்பதாகவும் அது ஆதாயம் தரும் பதவி என்றும் அப்படி ஒரு பதவியில் இருப்பவர் நாடாளுமன்ற உறுப்பினராகக் கூடாது என்று அரசியல் சட்டம் கூறுவதாகவும் அந்தப் புகாரில் குறிப்பிட்டிருந்தார்.

அந்தப் புகாரைத் தேர்தல் ஆணையகத்தின் பரிசீலனைக்கு குடியரசுத் தலைவர் அனுப்பிவைத்தார். அதைப் பரிசீலித்த ஆணையகம், புகார் சரியானதுதான். ஜெயா பச்சனின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பறிக்கவேண்டும் என்று பதில் அனுப்பியது. அதன் பிறகு ஜெயா பச்சனின் பதவி பறிக்கப்பட்டது. ஜெயா பச்சனின் பதவி பறிக்கப்பட்டதில் சொந்தக் காரணமும் அரசியல் காரணமும் உண்டு. ராஜீவ் காந்தியின் குடும்ப நண்பர்கள்தான் அமிதாப் பச்சனும் ஜெயா பச்சனும். ராஜீவ் குடும்பம் தங்களுக்கு துரோகம் செய்துவிட்டதாக ஜெயா பச்சன் ஒரு சந்தர்ப்பத்தில் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினார்.

ஜெயா பச்சன் சார்ந்துள்ள சமாஜவாதி கட்சியின் தலைவர்களான முலாயம் சிங் யாதவும் அமர் சிங்கும் 1998இல் சோனியாகாந்தி குடியரசுத் தலைவரிடம் கூறிய மிகவும் அப்பட்டமான பொய்யை அம்பலப்படுத்தினர். ஆட்சி அமைக்க தனக்கு மக்களவையின் 272 உறுப்பினர்களின் ஆதரவு இருக்கிறது என்ற சோனியா காந்தி கூறியிருந்தார். ஆனால், அது பொய் என்று அமர்சிங் - முலாயம் சிங் ஜோடி கூறியதால் சோனியாவின் முயற்சி தவிடு பொடியானது. எனவே, ஜெயா பச்சனும் அமர்சிங் - முலாயம் சிங் ஜோடியும் சோனியாவுக்கு மிகவும் 'முக்கியமானவர்கள்'.

ஜெயா பச்சனின் பதவி பறிக்கப்படும் வரை பொறுமையாக இருந்த 40 எதிர்க்கட்சி எம்.பிக்கள், அதே காரணத்துக்காக சோனியா காந்தி மற்றும் வேறு 3 பேரின் பதவிகளையும் பறிக்கவேண்டும் என்று குடியரசுத் தலைவரிடம் மனு அளித்தனர். தேசிய ஆலோசனைக் கவுன்சிலின் (என்.ஏ.சி) தலைவர் என்ற பதவி அதிகாரம் உள்ள, ஆதாயம் தரும் பதவி என்று அவர்கள் சுட்டிக்காட்டினர்.

தேசிய ஆலோசனைக் கவுன்சில் என்ற பதவி, அதிகார அமைப்பில் பிரதமர் அலுவலகத்துக்கு இணையான அதிகாரபீடமாக உருவாக்கப்பட்டது. பிரதமர் அலுவலகத்துக்கான நிதி ஒதுக்கல் பிரிவிலேயே என்.ஏ.சியும் சேர்க்கப்பட்டது. மத்திய அமைச்சரவைச் செயலகம்தான் இதற்கு இணைப்பு வழியாகச் செயற்படுகிறது. தேசிய ஆலோசனைக் கவுன்சிலின் தலைவர் பதவி என்பது பிரதமரைவிட அந்தஸ்து உள்ள பதவியாக இல்லாவிட்டாலும் சம அந்தஸ்து உள்ள பதவி யாக உருவாக்கப்பட்டது. 2006-2007 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் என்.ஏ.சி.இற்காக நிதியமைச்சர் ப.சிதம்பரம் 4 கோடி ரூபா ஒதுக்கியிருக்கிறார்.

40 எம்.பி.க்களின் புகாரை அடுத்து அரசு பீதியடைந்தது. அரசியல் சட்டத்தை வளைத்தாவது, உடைத்தாவது சோனியாவின் பதவியைக் காப்பாற்ற முயற்சி நடந்தது. அரசியல் சட்டம் முடமானாலும் சரி, சோனியாவின் பதவி தப்பித்தால் போதும் என்ற அவசரம் அரசிடம் தெரிந்தது. வரவு - செலவுத்திட்ட தொடர் முடிந்தபிறகு, அடுத்த நாடாளுமன்றம் கூடும் நாளை முன்கூட்டியே தீர்மானித்து கூட்டத் தொடரை ஒத்திவைப்பது வழக்கம். இந்த ஆண்டு மே 10 என்று அந்த நாளை முடிவு செய்தார்கள். மார்ச் 22ஆம் திகதி நாடாளுமன்றத்தை ஒத்திவைக்கக் கோராமல், ''திகதி குறிப்பிடாமல்'' ஒத்திவைக்க வேண்டும் என்று கோரினார்கள். இதிலும் ஒரு சூழ்ச்சி இருந்தது.

அவசரச் சட்டம் கொண்டுவருவதாக இருந்தால் நாடாளுமன்றத் தொடர் அப்போது நடந்துகொண்டிருக்கக்கூடாது. திகதி குறிப்பிட்டு ஒத்திவைத்துவிட்டாலும் அவசரச் சட்டம் கொண்டுவர இயலாது. எனவே, திகதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது. இதை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உணரும் முன்னால் 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் உணர்ந்து உண்மையைப்போட்டு உடைத்தது.

எனவே, வேறு வழியில்லாமல் 23ஆம் திகதி (வியாழக்கிழமை) அவர் ராஜினாமா முடிவுகளை அறிவித்தார். ஏன் இதை ஒரு நாள் முன்னதாகவே செய்திருக்கலாமே? அல்லது ஒருநாள் தாமதித்து செய்திருக்கலாமே? எல்லாம் அச்சம்தான் காரணம். 40 எம்.பிக்களின் புகார்களை தேர்தல் கமிஷனின் பரிசீலனைக்கு குடியரசுத் தலைவர் அனுப்பிவிட்டால் என்னசெய்வது? சோனியாவின் பதவியைக் காப்பாற்ற அவசரச் சட்டம் இயற்றினாலும் அதில் கையெழுத்திட குடியரசுத் தலைவர் மறுத்துவிட்டாலோ, தாமதப்படுத்தினாலோ என்ன செய்வது? கடைசி நேர ராஜினாமா என்ற ''தியாகம்'' இந்த உண்மைகளையெல்லாம் மூடி மறைக்கிறது.

-நன்றி: தினமணி.




# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 18-XXX தொடரிலக்கமுடைய TOYOTA CORONA model E.AT 170 வெள்ளைக்கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வெள்ளெருவைப் பிள்ளையார் கோயிலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய். T.P.: 077 3146022, 077 3248989
(48440)

45 நாள்கள் நிரம்பிய நல்லின அல்சேசன் பூச்சி நீக்கிய நாய்க்குட்டிகள் மற்றும் லவ்பேட்ஸ், ஆபிரிக்க லவ்பேட்ஸ் மற்றும் AM மில் அரைக்கும் இயந்திரங்கள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: அல்பா மிக்ஷர் லேன், மானிப்பாய். T.P.: 021 222 2887
(48476)

புறொயிலர் இறைச்சி முழுமையான நிறை 150/-உம் சுத்தம் செய்யப்பட்டது 250/-உம் கல்பேட்டும் விற்பனைக்குண்டு. அத்துடன் மொத்தமாகக் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவு வழங்கப்படும். தாசன் பாம், 158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(48394)

## காணி விற்பனைக்கு

ஏழாலை தெற்கு, மல்லாகம் - புன்னாலைக்கட்டுவன் பஸபோகும் றோட்டை எல்லையாகக் கொண்ட மதநாயகன் கலட்டியில் 23 பரப்புக் காணியும் இதற்குச் சற்று வடக்கே 17 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்புக்கு: பூதர் தம்பிராசா, ஏழாலை தெற்கு, மயிலங்காடு என்ற முகவரிக்கு அல்லது 011 2508007 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (48370)

திருநெல்வேலி, யாழ்ப்பாணம், கோண வளை ஒழுங்கையில் 1½ பரப்பு நீள் சதுரக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பிறகு: ஆ.சுந்தரலிங்கம், 85, கொழும்புத்துறை லேன், யாழ்ப்பாணம். T.P.: 0777 420240, 0777 661655
(48472)

தொல்புரம் என்னும் இடத்தில் புன்னப் பர்த்தன காணி 73 பரப்பு விற்பனைக் குண்டு. தொடர்பிற்கு: 011 2508007
(48370)

குப்பிளான் வடக்கு, கேணியடி, வைரவர் ஆலயத்திற்கு முன்பாக 4 பரப்பு 13.2 குளி பனங்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 0114 938501, 077 9115950
(48463)

## வீடு விற்பனைக்கு

இல.07, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் வீடு விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பிற்கு:T.P.: 011 2508007
(48370)

கோப்பாய் வடக்கு, இலகடி வீதியில் அமைந்திருக்கும் 2½ பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் கூடிய வீடு விற்பனைக் குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: த.இராமகிருஷ்ணன், C/o க.சின்னத்துரை, இலகடி, கோப்பாய் வடக்கு, T.P.: 0777110142 (48466)

## லொறி விற்பனைக்கு

47-XXXX இலக்கம் கொண்ட நல்ல நிலையிலுள்ள அசோக் லேலண்ட் லொறி விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777448165
(48484)

## கார் விற்பனைக்கு

301-XXXX தொடரிலக்கமுடைய கொண்டா கார் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 61, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (சி/48515)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

Puve Bread Boxer Pups விற்பனைக் குண்டு. தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி/48468)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம்செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர்.
(சி/48467)

## இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

புறொயிலர் மற்றும் இறைச்சிக்கோழிகள் தினமும் சுத்தம் செய்து வழங்கப்படும். மொத்த வியாபாரிகளுக்கு விசேட கழிவுடன் வழங்கப்படும். தொடர்பு: S.சிவகுமாரன், கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல் செற் அருகில்.
(48521)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

தரமான கலப்பின பேடு, சேவல் குஞ்சுகள் 1, 2, 2½ மாத வளர்ச்சியடந்தவை விற்பனைக்குண்டு. நல்லின அடை முட்டைகளும் விற்பனைக்குண்டு. தொடர்பிற்கு: ஜெகன், நெசவுசாலை ஒழுங்கை, இருபாலை வீதி, கோண்டாவில். (48522)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான பகிரா புறொயிலர் குஞ்சுகள் 25.03.2006 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முற்கூட்டியே மேற்கொள்ளவும். றாஜீவ் - ஆனைக்கோட்டைச் சந்தி, P.ரவி-தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி, தாரகை-முதலாம் கட்டை, பருத்தித்துறை, றஞ்சித்-517, ஸ்ரான்லி றோட், மதுரா-ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021222 2867, 021 222 3529
(48437)

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட NO.1, Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 03.04.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக் கிளைகளிலும் சுட்டிபாம் - வட்டுக்கோட்டை, கரன்- ஆலடி, உடுவில், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/48501)

## வாடகைக்கு

சகல வசதிகளுடனும் கூடிய அறைகள் மாணவர்களுக்கு வாடகைக்குண்டு. தொடர்பு: 10/2, புகையிரத வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம் (யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்) T.P.: 077 9578244
(48483)

யாழ்ப்பாணம், ஸ்ரேசன் றோட்டில் கடைகள் வாடகைக்குண்டு. தொடர்பு: Dr.K. இராஜரட்ணம், 129, ஸ்ரேஷன் றோட், யாழ்ப்பாணம். (48473)

நல்லூர், ஆனைப்பந்தியில் சகல வசதிகளும் கொண்ட A/C, non A/C அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்குண்டு. தொலைபேசி இல. 077 9024387 (48428)

## வீடு வாடகைக்கு

சுண்டுக்குளியில் சகல வசதியுடைய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு:R.P.ஜெயதாஸ், 17/2A, சந்தனமாதா கோயில் ஒழுங்கை, சுண்டுக்குளி. 021 222 3360 (48483)

யாழ்.இந்துக் கல்லூரி சுற்றாடலில் ஓடை லேனில் நான்கு அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 22, ஓடை லேன், ஒட்டுமடம். (48507)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1970, மிருகசீரிடம், மிதுனராசி, 12இல் செவ்வாய் சூரியன், 5'5'' உயரம், கிரகபாவம் 64, G.C.E. O/L படித்த, தையல் பணியில் உள்ள மணமகளுக்கும் 1974, அவிட்டம், கும்ப ராசி, 4இல் செவ்வாய் கிரகபாவம் 63, உயரம் 5'6'', G.C.E. O/L படித்த மணமகளுக்கும் படித்த கமம், வியாபாரம், சுயதொழில் புரியும் மணமகன்கள் தேவை. தொடர்பு: சிவாலயா சர்வதேச திருமண நிலையம், இல.11, யமுனா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். T.P.: 077 6528641 (48479)

**Organ / Violin Notes**
200 சினிமாப்பாடல்களின் இசைக் குறிப்புகள், கேள்வி ஞானம், Key Board exercise ஆகிய புத்தகங்கள் விற்பனையாகின்றன.
Karaweena Isai Manram
131(75), Temple Rd, Nallur, Jaffna
T.P : 0713055991

**REFRESH SYSTEM**
புதிய, பழைய கணனிகள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும். தொடர்பு:
(021 4591818, 077 3253104, 077 6279671)
(47878) சுதுமலை, மானிப்பாய்.

# சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை,மார்ச்25

யாழ். மறை மாவட்ட மரியாயின் சேனையின் ஆச்சீஸ்விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ். மறை மாவட்டத்திலுள்ள அனைத்து மரியாயின் சேனை அங்கத்தவர்களும் பங்குகொள்ளும் இவ்விழாவில் திருப்பலி, மீள் அர்ப்பணம் என்பன இடம் பெறும் என்று ஆன்மீக இயக்குநர் அருட்திரு றெஜி ராஜேஸ்வரன் அடிகள் தெரிவித்துள்ளார்.

(த-30)

★ ★ ★

கொழும்புத்துறை,மார்ச்25

கச்சேரி நல்லூர் வீதி, பாணான்குளம் நாச்சிஅம்மன்ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அடுத்த மாதம் 12ஆம் திகதி புதன் கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவமும் புதுவருடப்பிறப்பன்று அதிகாலை 4.31 மணிக்கு அபிஷேகமும் 15ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும்.

(த-30)

★ ★ ★

வலி.தென்மேற்கு,மார்ச்25

பண்ணாகம் விசவர்த்தனை முருகமூர்த்தி ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள்நடைபெற்று எதிர்வரும் 10ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் 11ஆம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

(த-135)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல 15, சிராம்பியடி வீதி (off Stanly Rd.)
Tele :- 021-2228250 , 0777-222422
இலங்கையில் முதற்தடவையாக கம்பனிக்கணக்குகளுடன்
Computerized Accounting
AccPac + Quick Books Pro + MYOB
ஆகிய முன்னணி Accounting Software அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்
Course Contents
Fundamentals of IT
Manual Accounting
Financial Accounting
Cost Accounting
Taxation (Including VAT)
Stock Control
Bank Reconciliation
Budgeting
fore Casting
Business Planning
80% Off
Tally Accounting Package
புதிய பிரிவுகள் ஆரம்பமாகிறது
வகுப்புக்கள் ஆரம்பம் :-
01/04/2006 , 02/04/2006
Time :- 08.30-10.30
04.00-05.30(Tally)


ஜெய் குருதேவ்
வாழும்கலை அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்
வாழும் கலைப்பயிற்சி மேற்கொண்ட அனைத்து அன்பர்களும் வரும் ஞாயிறு (26.03.2006) காலை 7 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெற இருக்கும் சுதர்சனக்கிரியா (Long kriya) பயிற்சியில் கலந்துகொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
குருஜீ ஸ்ரீஸ்ரீரவிசங்கர் அவர்கள் 07.04.2006 அன்று யாழ்ப்பாணம் விஜயம்
மேலும் தொடர்புகளுக்கு: 0779059549, 0779749346,0777157281

அறிவுள்ளோரின் சிறந்த தெரிவு
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!
Packed By:- ROYAL INDUSTRIES COLOMBO-12 ☎:0777-277670
அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்


ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎: 021 222 2567
(C-43109)
100g றோயல் குளுக்கோசின் ஆகக்கூடிய சில்லறை விலை 23.90/=

## வெளிக்கள உத்தியோகத்தர்கள்

சுனாமியால் பாதிக்கப்பட்ட இளையோரிடையே முல்லைத்தீவு மற்றும் வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளில் வேலை செய்யக்கூடிய வெளிக்கள அலுவலர்கள் வேண்டப்படுகின்றனர்.

இளையோர் திறன்களை வளர்க்கும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தும் திறனுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முழுமையான சுய விவரங்களுடன் விண்ணப்பங்களை 'செயலாளர், இளையோர் செயற்பாட்டு நிறுவனம், தலைமைப் பணிமனை, கிளிநொச்சி' என்னும் முகவரிக்கு 10-04-2006இற்கு முன் அனுப்பிவைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

**பணிப்பாளர்,**
**இளையோர் செயற்பாட்டு நிறுவனம்,**
**தலைமைப் பணிமனை,**
**கிளிநொச்சி.** (சி/48507) (24-32-19-14)

AIMS
ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES
Your Training Partner
New Batch Starts on 26-03-2006
Diploma in
GNU/Linux Administration
- Redhat/Fedora/Mandrake Linux Installation
- Open Source world Introduction
- Open Source Software Installation & Configuration
- Fundamentals of Command Line Operations.
- Networking using Linux Environment

Linux யாருக்கு?
- NGO மற்றும் Open source software உபயோகிக்கும் அலுவலகங்களில் பணி புரிபவர்கள்.
- பல்கலைக்கழக மாணவர்கள்
- மற்றும் வேகமாக முன்னேறி வரும் Linux பற்றி அறிய விரும்பும் அனைவருக்கும்.

மேலதிக விபரங்களுக்கு
Drictor, AIMS Jaffna ,
# 118,பலாலி வீதி ,தபாற்பெட்டி சந்தி ,திருநெல்வேலி
Center for FOSS & LAMP

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
04 * 08 * 1919



இறப்பு
20 * 03 * 2001

### அமரர் செல்லமுத்து சரவணமுத்து

திதி: 25-03-2006

பார்போற்றும் உத்தமராய் பாரினிலே வாழ்ந்தீரே!
விண்ணுலகம் தான் சேர்ந்து ஐந்தாண்டு ஆனதையா!
எந்நாளும் உமை நினைத்தே இப்பூவுலகில்
- நாம் வாழ்கின்றோம்.

**மனைவி,**
**பிள்ளைகள்.**

**கொழும்பு.**
(48508) (24-32-19-14)

# தகுதியானோர் விண்ணப்பிக்கலாம்

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியம் மாவட்ட மட்டத்திலான ஒருங்கிணைப்பு விடயங்களுக்கான அபிவிருத்தி உதவியாளரை ஆள்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரர் 45 வயதிற்குட்பட்டவராக இருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் பட்டதாரியாகவும் இருத்தல்வேண்டும்.

களுத்துறை, காலி, அனுராதபுரம், பொலநறுவை, வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காகவே இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகுதியானவர்கள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் 'பிரதம நிறைவேற்று அதிகாரி, உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியம், 17எ, பான்ஸ் பிளேஸ், கொழும்பு -07' என்ற முக வரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

* * * *

தேசிய நீர் விநியோகம் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கீழ் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பிரதிப் பொதுமுகாமையாளர் சபைத் தரம் II இற்கு கோரப்பட்டுள்ள விண்ணப்பங்களின் விண்ணப்பதாரர் அங்கீகாரம் பெற்ற வர்த்தக நிர்வாக நிறுவனம் ஒன்றின் அங்கத்துவம் பெற்ற வராக இருப்பதுடன் சந்தைப்படுத்தல் நிறுவனம் ஒன்றில் 15 வருட நிலை அனுபவம் உள்ள வராகவும் இருக்கவேண்டும்.

அல்லது, வர்த்தக நிர்வாகத்தில் பட்டப்பின் படிப்பு பதவியுடன் அங்கீகாரம் பெற்ற சந் தைப்படுத்தல் நிறுவனம் ஒன்றில் 13 வருட அனுபவம் உள்ளவராக இருக்கவேண்டும்.

பிரதிப் பொதுமுகாமையாளர் சபைத்தரம் II இற்கு கோரப்பட்டுள்ள விண்ணப்பங்களின் விண்ணப்பதாரர் பல்கலைக்கழகப் பட்டம் அல்லது அதற்குச் சமனான தகுதியுடன் ஆளணி முகாமைத்துவ நிறுவனம் ஒன்றின் அங்கத்துவத்துடனும் 15 வருட பட்டப்பின் படிப்பின் பதவிநிலை உத்தியோகத்தராகவும் அனுபவம் பெற்றிருக்கவேண்டும்.

அவற்றில் 5 வருடம் ஆளணி முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத் துறையில் சிரேஷ்ட பணி நிலைப் பதவி வகித்திருத்தல் வேண்டும்.

இதேவேளை - விண்ணப்பதாரர் 45 வயதிற்கு மேற்பட்டவராக இருக்கவேண்டும்.

தகுதியானவர்கள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர், பொது முகாமையாளர், தேசிய நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்பு சபை, காலி வீதி, இரத்மலானை என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

* * * *

தேச நிர்மாண மற்றும் அபிவிருத்தி அமைச்சு சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கி யினால் நிதியிடப்பட்ட ஏழ்மைசார் பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமுதாய அதிகார மளித்தல் திட்டத்தில் முகாமைத்துவப் பிரிவில் உள்ள பதவிகளை நிரப்புவதற்கு தகுதி யுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சிரேஷ்ட பொறியியலாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் 45 வயதிற்கு மேற்படாமல் இருப் பதுடன் பொறியல்துறை அல்லது அதற்கு சமமான துறையில் இளமாணிப் பட்டம் பெற்றிருப் பதுடன் கணனி அறிவுடையவராகவும் இருத்தல் வேண்டும் .

பொறியியல் உதவியாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் 45 வயதுக்கு மேற்பட்டவராக இருப்பதுடன் பொறியல் துறையில் தேசிய தொழில்நுட்பதாரியாக இருத்தல்வேண்டும். அல்லது அதற்கு சமமான தகைமையுடையவராக இருத்தல் வேண்டும்.

படவரைஞர் பதவிக்கான விண்ணப்பதாரர் 45வயதுக்குட்பட்டவராக இருப்பதுடன் ஒரே தடவையில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், மொழி, இலக்கி யம், விஞ்ஞானம் உட்பட்ட 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான விண்ணப்தாரர் 45 வயதுக்குட்பட்டவராக இருப்பதுடன் ஜி.சீ.ஈ. சதாரண தரப் பரீட்சையில் ஒரே தடவையில் தமிழ்/சிங்களம்/ எண்கணிதம்/ கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

காரியாலய உதவியாளர் பதவிக்காண விண்ணப்பதாரர் 45 வயதுக்குட்பட்டவராக இருப்பதுடன் ஜி.சீ.ஈ. சதாரண தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும்.

சமூகவியலாளர் பதவிக்கான விண்ணப்பரதாரர் புவியியல், கிராமிய பொருண்மியம், சமூகவியல் ஆகிய அல்லது இதற்குச் சமமான பாடங்களில் இளமாணிப் பட்டம் பெற்றராக - 45 வயதிற்குட்பட்டவராக இருக்கவேண்டும்.

தகுதியானவர்கள் ஏப்ரல் 3ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை 'பொறியியலா ளர் எஸ்.சர்வலோகநாதன், மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம், விகாரை வீதி, திரு கோணமலை' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

* * * *

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் கீழ் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகுதி யானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

6 'ஏ' தரத்திலான சமுர்த்தி முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் 25-45 வயதிற் குட்பட்டவராக இருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்ற வராகவும் இருக்கவேண்டும்.

6ஆம் தரத்திலான கணனி நிகழ்ச்சி நிரல் வரையுநர் பதவிக்கான விண்ணப்பதாரர் தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்தில் அல்லது இளைஞர் வேலைவாய்ப்புத் திட்டமிடல் பிரிவில் கணனி ஒழுங்குமுறைபகுப்பாய்வு போன்றவற்றில் இரண்டு வருட அனுபவமுள்ள வர்கள் இருக்கவேண்டும் . அத்துடன் 21-35 வயதிற்குட்பட்டவராக இருக்கவேண்டும்.

6ஆம் தரத்திலான கணனி ஒழுங்குமுறை நிர்வாகி பதவிக்கான விண்ணப்பதாரர் தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்தில் இரண்டு வருட அனுபவம் உள்ளவராக அல்லது அதற்குச் சமனான தகைமையுடையவராக இருப்பதுடன் 25-35.வய்திற்குட்பட்டவராக இருக்கவேண்டும்.

தகுதியானவர்கள் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், இலங்கை சமுர்த்தி அதிகார சபை 4 ஆவது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல எனினும் முகவரிக்கு விண் ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ-203)



புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் கடந்த 27 வருடங்களாக ஆய்வுகூட உதவியாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற த.விஸ்வலிங்கத்தின் சேவை நயப்பு வைபவம் அண்மையில் நடைபெற்றது. இது தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட விழாவில் ஆசிரியர் வி.செவ்வந்திநாதன் குருக்கள் வாழ்த்துப்பா வழங்குவதைப் படத்தில் காணலாம். உப அதிபர் கு.வாகீசனும் படத்தில் உள்ளார். (எ-72)

# நூல் வரிசை



நூல் : நினைக்க... சிரிக்க... சிந்திக்க...
ஆசிரியர் : பொ.சண்முகநாதன்(சண் அங்கிள்)
வெளியீடு : மணிமேகலைப் பிரசுரம், சென்னை 600017

நகைச் சுவைப் புனைவு எழுத்துக்களால் ஏலவே அறியப்பட்ட பொ. சண்முகநாதன் பத்தி எழுத்தாக்கத்தில் 'உதயன்' பத்திரிகையில் வாரம் தோறும் எழுதியவை 'நினைக்க சிரிக்க சிந்திக்க...' இப்போது அதே பெய ரில் நூலாகியுள்ளது. தமிழகத்தின் பிரபல நூல் வெளியீட்டகமான மணி மேகலை பிரசுரம் இதனை வெளியிட்டுள்ளது.

பத்தி எழுத்துக்கள் ஒரு தொடர்ந்த ஓட்டத்தில் விடயங்களை ஒழுங்குமுறைப்படுத்தி எழுதப்படுபவை. அதற்குத் தனியாற்றலும், அவதானிப்பும், விடய சேகரிப்பும் தேவை. நகைச்சுவையான விடயங்களை எழுதுவது சற்றுக் கடினமான பணியாகும். எனினும், தனக்கே உரித்தான மொழி நடையில் அதனைச் சாத்தியமாக்கி இருக்கிறார் 'சண் அங்கிள்' எழுமாறான விடயத் தேர்வோடு நினைந்து பார்க்கவும், அவற்றில் நகைக்கக் கூடியவற்றில் சிரிக்கவும், அவ்வாறான சில விடயங்களையிட்டுச் சிந்திக்கவும் கூடிய வகையில் அவரது எழுத்துக்கள் காணப்படுவது தலைப்புப் பொருத்தத்தை மெய்ப்பிக்கின்றன.

தமிழக எழுத்தாளர் 'சாலி' எழுதிய 'கேரக்டர்' போல, இவர் தனது எழுத்துக்களில் முன் வைக் கின்ற யாழ்ப்பாண முகங்கள் நினைவுக் கிளர்த்தலை உருவாக்கும் முன்னைய தலைமுறைப் பாத்திரங்களே. அது போல விவரிக்கப்படும் சம்பவங்களும் மீள் நினைவை உண்டு பண்ணு வனவே.

மீள நினைப்பதிலுள்ள சுவை அனுபவத்தைத் தொற்ற வைப்பதே இந்நூலின் பெரும் பயன் எனலாம். வாசகர்களிடம் நினைவுக் கிளர்த்தலை ஏற்படுத்தி, பரவசமூட்டி தாம் சார்ந்த புதிய சிந்தனைகளை மேலெழச் செய்வதில் இந்நூல் பெரும் பங்காற்றக்கூடியது. நல்ல நூல்களின் அனுபவமும் அதுவே.

சமூகத்திலும், அதன் நடவடிக்கைகளிலும் உள்ள குறைபாடுகளை நகைச்சுவையுடன் நாசூக்காக வெளிப்படுத்தும் திறமையை இந்நூலின் பல பத்திகளில் படிக்கலாம் என உத யன் பிரதம ஆசிரியரும்,

ஆழமான செய்திகள் இலகு நடையில் வாசகருடன் பேசுவது போன்று நகைச்சுவை கலந்து தரப்பட்டிருப்பதாக விமர்சகர் கே.எஸ்.சிவகுமாரனும் கூறியுள்ளமையை நூலி லுள்ள 60 கட்டுரைகளில் பெரும்பாலானவை நிரூபிக்கின்றன.

இந்தப் பத்தி எழுத்துக்கள் இலங்கை பத்திரிகை ஆசிரியர் கழகத்தின் விருதைப் பெற் றுக்கொண்டமை மகிழ்ச்சியான விடயமே. ஆசிரியரின் பன்முகப் பார்வைக்கு இந்நூல் சான்று பகரும்.

- இயல்வாணன்.



நூல் : கலைமுகம் - கலை இலக்கிய சமூக இதழ் (ஜூலை - டிசெம்பர் 2005)
ஆசிரியர் : நீ.மரியசேவியர் அடிகளார்
வெளியீடு : திருமறைக் கலாமன்றம்

கலை முகம் ஜூலை - டிசெம்பர் 2005 காலாண்டு இதழ் எமது கை களுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

வழமைபோல் இந்த இதழ் பல்வேறு அம்சங்களைத் தன்னுள்ளே தாங்கிவந்துள்ள அதே சமயம் புதிய புதிய வேறுபாடான அம்சங்களை யும் காணக்கூடியதாகவிருக்கின்றன.

கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் போன்ற அம்சங்களைத் தாங்கி வந்துள்ளதுடன் புதிய எழுத்தாளர்களையும் இந்த இதழ் அறிமுகம் செய்துவைத்துள்ளது.

கலைகளின் ஆன்மீகச் சக்தி, குழந்தைகளும் தொலைக் காட்சிகளும் போன்ற கட்டுரை களும் 'இனியாவது', 'அர்த்தம்', 'அறைகளில்...' போன்ற இன்னும் பல கவிதைத் தொகுப்பு களும் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை - இழப்பின் வெளி என்ற தலைப்பில் ஜோன்சன் பிறேமானந்தின் அஞ் சலிக் குறிப்பும் இந்த இதழில் இடம்பெற்றுள்ளது.

மொத்தத்தில் அனைத்து விடயங்களுக்கும் முக்கியத்துவமளித்து கலைமுகம் காலாண்டு இதழ் வெளியாகியுள்ளது.

- கங்கா.



நூல் : நம்பிக்கையின் பாதையில்
ஆசிரியர்கள் : அருட்கலாநிதி எட்வீன் சவுந்தரா, செபமாலை அன்புராசா

நம்பிக்கையின் பாதையில் என்னும் இந்நூல் 2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இடம்பெற்ற ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் இடம்பெற்ற செயற்பாடுகள், ஆழிப்பேரலை அழிவுகள் போன்ற நிகழ்வு களை வர்ணப்படங்கள் மூலம் தாங்கி வெளிவந்துள்ளது.

வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத லட்சக்கணக்கான அழிவுகள் ஏற் பட்ட அந்நாள் நிகழ்வுகளை இந்நூல் மூலம் எதிர்கால சந்ததியினர் அறிந்துகொள்ளமுடி யும்

ஆழிப்பேரலையின் அதிபயங்கர தாக்கத்தின் பின்னர் காணப்பட்ட நெஞ்சை உருக்கும் பல சம்பவங்களை வர்ணப்புகைப்படங்களாக தந்திருப்பது வியந்து பாராட்டக்கூடியதாய் உள்ளது. பயங்கர பேரலையொன்று மேலெழுந்து சுழன்று வீழும் காட்சி அட்டையை அலங் கரிக்கின்றது.

- சாயினி.

# மக்கள் முகம்



மல்லாவி மத்திய கல்லூரி மாணவியான தயாழினி பரராஜ சிங்கம் 2005 ஆம் ஆண்டிற்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை யில் 142 புள்ளிகளைப் பெற்று தேசிய சேமிப்பு வங்கியின் 'ஹப் பன்' பரிசுத் திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டார். இவருக்கான பதக்க மும் சான்றும் கடந்த 03.03.2006 அன்று ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற தேசிய சேமிப்பு வங்கியின் பரிசளிப்பு விழாவில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் வழங்கப்பட்டன.



''பிரதிஷ்டா வித்தகர்'', 'சிவாகம ஞானசேகரம்'',''கிரியாகான கலாமணி'' வேதாகம ஜோதி சிவஸ்ரீ கி.சோமசுந்தரக் குருக்கள் (மட்டுவில்) கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி கே.ஏக்கரட்ண முன் னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக பதவி ஏற்றுக் கொண்டார்.

தென்மராட்சி சாவகச்சேரியில் தனது சமய, சமூகப் பணிகளுடன் கல்வயல் வேதவனப் பிள்ளையார் கோயில், சாவகச்சேரி துர்க்கை அம்மன் கோயில்,நுணாவில் கந்தசாமி கோயில் போன்ற பல கோயில் களில் பிரதம சிவாச்சாரியாராகவும் கனடா,சிங்கப்பூர், மலேசியா போன்ற வெளி நாடுகளில் நடைபெற்ற பல கும்பாபிஷேகங்களில் பிரதம சிவாச்சாரியாராகவும் பங்கு கொண்டு தனது சமய சமூகப் பணிகளைச் செய்து தென்னிலங்கையிலும் தனது பணி களை ஆற்றி வருகின்றார். (3)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



திருமதி அருளானந்தம் திரேசம்மா

மலர்வு 10-04-1932 — உதிர்வு 25-03-2005

*நெஞ்சத்தின் அடித்தளத்தில்*
*நிரந்தரமாய் வேர் ஊன்றி*
*நிழல் அளித்த தெய்வமே!*
*நிர்க்கதியாய் எமைப்பிரிந்து*
*நெடுந்தூரம் சென்றாயோ?*

*ஓடியது ஆண்டொன்று*
*வாடியது எமதுள்ளம்*
*தேடியது உன் நினைவை*
*நாடியது உன்வரவை.*

பிரிவால் நினைந்துருகும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார். உறவினர்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(48525)(39-11-14)

# நன்றி நவிலல்



அமரர்

**செபமாலை மரிய அருளானந்தம்**

எமது அன்புத் தந்தை நோயுற்று இருந்த வேளை யாழ்.போதனா வைத்தியசாலை 10ஆம் இலக்க விடுதியில் பணியாற்றிய வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்புத் தந்தையின் மறைவுச் செய்தியை அறிந்து எமது துயரில் பங்கெடுக்கவென ஓடோடி வந்த உறவுகளுக்கும், அயலவர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம். விசேடமாக எமது பங்குத் தந்தைக்கும், பங்கு மக்களிற்கும் ஏனைய அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகளுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் அவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினரின் ஒருங்கிணைப்பாளருக்கும், நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலக உதவியாளருக்கும், சாவகச்சேரி பொலீஸ் தலைமை அதிகாரிக்கும் சகபொலீஸ் உத்தியோகத்தர்களுக்கும், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் J.R.S மாவட்ட இணைப்பாளர்கள், பிரதேச இணைப்பாளர்கள், பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கும், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினருக்கும், தென்மராட்சி சமுர்த்திச் சங்க உத்தியோகத்தர்களுக்கும், சமுர்த்தி மகா சங்க முகாமையாளருக்கும், சக உத்தியோகத்தர்களுக்கும், கிராமசேவையாளருக்கும், கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர், ஊழியர்களுக்கும் சாவகச்சேரி பிரதேசசபையின் அத்தியட்சகருக்கும், ஊழியர்களுக்கும் ,நகர சபை ஊழியர்களுக்கும் எமது உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி நவில்கின்றோம்.

மேலும் தமது அனுதாபச் செய்திகளைப் பத்திரிகை மூலமாகவும் துண்டுப்பிரசுரம் ஊடாகவும், தொலைபேசியிலும் தெரிவித்தவர்களுக்கும், மலர்மாலைகளாலும், மலர் வளையங்களாலும் தமது அஞ்சலியைத் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகள்.

*எமது அன்புத் தந்தையின் நினைவாக நாளை (26.03.2006) ஞாயிற்றுக்கிழமை இடம் பெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**புனித லிகோரியார் கோயிலடி,**
**கச்சாய் வீதி, சாவகச்சேரி.**

குடும்பத்தினர்.

(48511) (39-11-14)


# ஜயோதா

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7480188 முதல் 7490081 வரை. சீட்டிழுப்பு இல. 222 திகதி 23-03-2006

## வெற்றி எண்கள்

3 2 0 7 2 8 — சுப்பர் எண் 01

ஜக்பொட் பரிசு ரூ. **10,950,625/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 10,950,625/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 85 | 5,000/= | 425,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 850 | 500/= | 425,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8508 | 50/= | 425,400/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 84302 | 10/= | 843,020/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/= | 45,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 84 | 1,000/= | 84,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 855 | 100/= | 85,500/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8424 | 20/= | 168,480/= |
| | | மொத்தம் ரூ. | **3,951,400/=** |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை **4,554,000/-**

ரூ. 75,325/- பெறுமதியான சட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மொனராகல | 7488187-9-08 |
| கேகாலை | 7482016-0-46 |
| இரத்தினபுரி | 7485857-2-50 |
| மாத்தளை | 7483823-3-26 |
| அம்பாறை | 7485274-0-33 |
| காலி | 7486522-0-57 |
| மாத்தறை | 7481716-1-96 |
| கண்டி | 7486249-5-00 |

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

**ரூ. 11,187,150/-**

தொடர் இல. 656915I க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 மார்ச் 27 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


## வைத்தியசாலைகளுக்கு மருந்துகள் விநியோகம்

வலி. தென்மேற்கு,மார்ச்25

யாழ்.சுகாதார திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியப் பிரிவு இவ்வாரம் மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை, சங்கானை அரசினர் வைத்தியசாலை, வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலை, காரைநகர் அரசினர் வைத்தியசாலை, தொல்புரம் அரசினர் மத்திய மருந்தகம், இளவாலை அரசினர் மத்திய மருந்தகம் ஆகியவற்றுக்கு இவ்வருட முதலாம் கந்தாயத்திற்கான (காலாண்டுக்கான) மருந்து வகைகளை நேரடியாக லொறி மூலம் கொண்டு சென்று விநியோகம் செய்துள்ளது. இதன் மூலம் இவ்வைத்தியசாலைகளில் நிலவி வந்த மருந்துத் தட்டுப்பாடு நீங்கியுள்ளது. (த-135)

## பாவனையாளர் ஒருங்கிணைப்புக் குழு

வலி.தென்மேற்கு,மார்ச் 25

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலக பிரிவுக்கான பாவனையாளர் ஒருங்கிணைப்புக் குழு அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் அங்குரார்ப்பணக் கூட்டம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்களின் பொறுப்பாளர் மற்றும் யாழ்.அரசாங்க செயலக அதிகாரிகள் சிலரும் இதில் கலந்துகொண்டு பாவனையாளர் ஒருங்கிணைப்புக்குழுவின் செயற்பாடுகள் குறித்தும் கடமைகள் குறித்தும் விளக்கமளித்து உரையாற்றினார்கள்.

இக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற அதிபரும், மாதகல் விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவருமான வி.சிற்றம்பலம் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக நவாலி தெற்கைச் சேர்ந்த யே.பெ.அருமைநாயகமும், பொருளாளராக சு.மோகனமுரளியும் தெரிவாகினர். ஒன்பது பேரைக்கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.(த-135)

## சுகாதார ஊழியர்களுக்கு இலவசச் சீருடைகள்

வலி.தென்மேற்கு - மார்ச் 25

யாழ்.மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளிலும் மற்றும் சுகாதார திணைக்கள நிறுவனங்களிலும் கடமையாற்றும் ஊழியர்களுக்கு கடந்த 2005 ஆம் ஆண்டுக்கான இலவசச் சீருடைகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

பரிசாரகர்கள், சுகாதாரத் தொழிலாளர்கள், சாதாரண தொழிலாளர்கள், காவலாளிகள் ஆகியோர் உட்பட பல்வேறு தரங்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கு இந்த உத்தியோக பூர்வ சீருடைகள் நேரடியாகக் கொண்டு சென்று வழங்கப்பட்டு வருவதாக யாழ்.சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (த-135)

## மானிப்பாய் லயன்ஸ்கழக ஸ்தாபகர் தினவிழா

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் ஸ்தாபகர் தின விழா இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம் பெறும்.

வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் லயன். எஸ். சிறினிவாசன் தலைமையில் நிகழ்வு இடம்பெறும்.

நிகழ்விற்கு 306 பி 1 மாவட்ட ஆளுநர் லயன் சரத்குணசேகர திருமதி ஆன் குணசேகர ஆகியோர் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வர்.

சிறப்பு விருந்தினராக முன்னாள் மாவட்ட ஆளுநர் லயன் எஸ். சிவபாதசுந்தரம் (MJF/ JP) கலந்து கொள்வார். (த-185)

## கட்டாக்காலிகளால் சிறுதானியச்செய்கை கைவிடப்படும் நிலை!

வலி.தென்மேற்கு - மார்ச் 25

சில்லாலை சந்தை மற்றும் தும்பளப்பாய் வயல்வெளிப்பகுதிகளில் பெரும்பாலான விவசாயிகள் இம்முறை சிறுதானியச் செய்கையை மேற்கொள்ள முடியாத நிலையில் இருந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இப் பகுதியில் கட்டாக்காலியாக விடப்படும் பெரும்தொகையான ஆடு, மாடுகளின் தொல்லை காரணமாக தாம் எள்ளு, பயறு, சணல் போன்ற சிறுதானியச் செய்கையில் ஈடுபட முடியாதிருப்பதாகவும், கடந்த வருடம் தம்மால் மேற்கொள்ளப்பட்ட சிறுதானியச் செய்கை இக் கட்டாக்காலிகளால் அழிக்கப்பட்டு தாம் நஷ்டமடைந்ததாகவும் இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது பற்றி இப் பகுதி விவசாயிகள் சம்மேளனம் காத்திரமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் இவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (த-135)

## மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,மார்ச் 25

நீர்கொழும்பு லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் நடத்தும் பொது மருத்துவ முகாம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு தொல்புரம் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சிறுவர், முதியவர்கள் இந்த மருத்துவ முகாமில் கலந்து கொண்டு பயனடையலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-204)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 17-09-1949 — மறைவு 23-02-2006

23.02.2006 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தந்தையின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (25.03.2006) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற விருப்பதால் அந்நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அமரர்
**இரத்தினம் சோமதேவன் [சின்னத்தம்பி]**

- குடும்பத்தினர்.

தொட்டிலடி,
சங்கானை.

(48527) (24-39-11-14)

# கண்ணீர்க் காணிக்கை



எமது கல்லூரியின் பழைய மாணவிகளான **சுகந்தினி, வாசுகி, சுகன்யா** மற்றும் தரம் 11 இல் கல்வி கற்கும் **வாசுதன்** ஆகியோரின் அன்புத் தந்தை **அரசகுலசிங்கம் புலேந்திரன்** அவர்கள் கடந்த 28.02.2006 அன்று காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றாம்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
**தரம் 11 மாணவர்கள்.**
சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

(சி.48518) (39-11-14)

# மரண அறிவித்தல்

## தர்மலிங்கம் தியாகராசா



**(கரம்பன் கிழக்கு, காளி கோயில் பரிபாலனசபைத் தலைவரும் தற்போதைய அங்கத்தவரும், உரிமையாளர் Leydon body builder E.T.T.R 19, Palali Road, Jaffna.)**

கரம்பன் கிழக்கு, காளிகோயிலடி, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் 41, யாழ். வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்போது 94/50, வோல்ஸ் லேன், கொழும்பு-15 இல் வசித்தவருமான த்ர்மலிங்கம் தியாகராசா அவர்கள் 21.03.2006 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம்- பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சண்முகம்- கிறேஸ் தம்பதியரின் மருமகனும் ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் யுவனேசன் (கனடா), சித்திரா (கனடா), தயாநேசன் (கனடா), கலாவதனி, தவநேசன், சசிகரன், காலஞ்சென்ற றேகநேசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கந்தசாமி கனலட்சுமி, சாம்பசிவம் மீனாஅம்பாள் ஆகியோரின் சகோதரனும் கேசவன், அகல்யா, நிமலேஸ்வரன் (கனடா) ஆகியோரின் மாமனும் சங்கீர்த்தனனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.03.2006) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
*த.ராஜேஸ்வரி (மனைவி),*
*ஜெயவதனி (மருமகள் -நீர்வேலி).*

வோல்ச்ஸ் லேன்,
அலுத்மாவத்தை, கொழும்பு- 15.

(48524) (39-11-14)

# தனியார் தொலைக்காட்சி சேவை நடத்த ஜே.வி.பிக்கு அனுமதி

தனியார் தொலைக்காட்சி சேவையொன்றை ஆரம்பிப்பதற்கான அலைவரிசை அனுமதியொன்றை ஜே.வி.பியினருக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

இதற்கான இறுதி அங்கீகாரத்தை ஊடகத்துறை அமைச்சுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வாரம் வழங்கியிருக்கிறார் எனத் தெரியவருகிறது. தனியார் தொலைக்காட்சிச் சேவையொன்றை ஆரம்பிப்பதற்கான யோசனை கொண்டிருந்த ஜே.வி.பி. இதற்கான அனுமதியைத் தருமாறு நெடுநாள்களாக அரசாங்கத்திடம் கோரிவந்தது.

இதனடிப்படையிலேயே தொலைக்காட்சி ஒளிபரப்புக்கான அலைவரிசை அனுமதி ஜே.வி.பிக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, வெகுவிரைவில் புதிய தொலைக்காட்சிச் சேவையை ஆரம்பிக்கவுள்ள ஜே.வி.பி. அதன் ஊடாகத் தனது கட்சிச் செயற்பாடுகளையும், பிரசாரங்களையும் முன்னேடுக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே நாட்டில் இயங்கும் பல்வேறு தனியார் தொலைக் காட்சி நிறுவனங்களோடு ஜே.வி.பி. முரண்பட்டு நிற்பதும் குறிப்பிடத் தக்கது. (க-ஐ)

# உதிரி விவகாரங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றன. அவை விடுதலைப் புலிகளுக்கு சார்பான நிலைமையை உருவாக்கியுள்ளன'' - என்றார் இராணுவத் தளபதி.

''நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் படை யினருடன் கலந்தாலோசித்தே இந்த யுத்த நிறுத்த உடன்பாடு செய்யப்பட்டதாகக் கூறப் படுகிறது. அப்படியானால் அப்போது படைத் தரப்பினர் இந்தத் தவறுகள் இருப்பதைக் கண்டுகொள்ளவில்லையா?'' - என்று இராணுவத் தளபதியிடம் கேட்கப்பட்டது.

''அப்போது நான் பொறுப்பில் இருக்கவில்லை. அப்போதிருந்த தளபதிகளுடன் கலந்துரையாடியிருந்தால் கடைசிவரை தளபதிகள் இந்த வடிவத்தில் இந்த உடன்பாட்டிற்கு இணக்கம் தெரிவித்திருக்க மாட்டார்கள் என்று நிச்சயமாக என்னால் கூறமுடியும்.

''ஜெனீவாப் பேச்சுப் பெறுபேறுகள் காரணமாகவோ அதனால் களத்தில் ஏற்பட்டிருக்கும் நிலைமை தொடர்பாகவோ நம்பிக்கை கொள்வதற்கு இராணுவத்துக்கு எதுவுமில்லை. விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் இராணுவத்தைச் சீண்டி, ஆத்திரமூட்டி, படை நடவடிக் கைகளுக்கு வழியேற்படுத்த முயற்சித்து வருகிறார்கள். அப்படி நிகழும்போது அதனை அடுத்தசுற்றுப் பேச்சுகளின்போது வசமாகப் பயன்படுத்தவும், இரணுவத்துக்கு எதிராகத் தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்த அது வசதியாக இருக்கும் என்று கருதியும் புலிகள் செயற்படுகிறார்கள்.

''இராணுவத் தளபதி என்ற முறையில் உறுதியாகவும், தெளிவாகவும் ஒன்றைக் கூறவிரும்புகிறேன். எனது துருப்புகள் மிகுந்த ஒழுக்கமான படையினர். அவர்கள் தமது தளபதிகளின் கட்டளைப்படியே நடப்பவர்கள். கருணா குழுவிற்கு எந்தவகையிலும் எனது துருப்புகள் ஆதரவளிக்கவேயில்லை.

''யுத்தமொன்று வருமென்று நான் நினைக்கவில்லை. ஏனென்றால், தமக்கு சாதகமான இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பயன்படுத்தி, இழுத்தடித்து, தமக்குரிய நன்மைகளைப் பெற்றுக்கொள்ள விரும்பும் புலிகள், அதன் காரணமாக யுத்தத்திற்கு போகமாட்டார்கள். இழுத்தடித்துப்போகவே அவர்கள் விரும்புவார்கள். இராணுவத்திற்கும் யுத்தத்தில் விருப்பமில்லை. ஆனால் எந்தச் சவாலையும் சமாளிக்கும் முழுத்தயார் நிலையில் இராணுவம் உள்ளது. யுத்தம்தான் முடிவென்றால் அதனை எதிர்கொள்ளவும் முழு உஷார் நிலையில் இராணுவம் காத்திருக்கிறது.

''யுத்தம் வெடித்தால் புலிகளுக்குத்தான் பேரழிவு காத்திருக்கிறது. அது புலிகளுக்கு நன்கு தெரியும். அதன் காரணமாக புலிகள் யுத்தத்திற்குப் போகமாட்டார்கள். எனவேதான் யுத்தம் வராது என்று கூறுகிறேன்'' - என்றார் இராணுவத் தளபதி.

இதேவேளை -

நேற்றைய நிகழ்வில் இராணுவத் தளபதி ஆற்றிய உரையின் முக்கிய அம்சங்களை 'றொயிட்டர்ஸ்' செய்தி நிறுவனம் வெளியிட்டது. அதில் இராணுவத் தளபதி கூறிய விடயங்கள் எனத் தெரிவிக்கப்பட்ட அம்சங்கள் வருமாறு :-

''அரசுப் படைகள், புலிகள் ஆகிய இரண்டு தரப்பினருமே தங்களது இராணுவ வலிமையைப் பலப்படுத்தி வருகின்றனர்.

''தமது படை வலிமையைப் புலிகள் மேம்படுத்துகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ஒரு புறம் படையைப் பலப்படுத்திக் கொண்டு மறுபுறம் உண்மையாக - தீவிரமாக - சமாதான முயற்சிகளில் அவர்கள் ஈடுபடமுடியுமா என்பது எனக்குத் தெரியவில்லை.

''நாங்களும் எமது படைகளைப் பலப்படுத்துகிறோம். ஆனால், சட்டரீதியான இராணுவம் அதைச் செய்வதும் ஒரு பயங்கரவாதப் படை அதைச் செய்வதும் வித்தியாசமானவை.

''புலிகள் எங்கள் மீது தாக்குதல் நடத்தி எங்களைச் சீண்டுகிறார்கள். ஆனால், பேச்சுகளுக்கு இணங்கிய பின்னர் அவர்கள் 'தப்புத் தண்டா' செய்யவில்லை.

''இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் கருணா முகாமும் எதுவுமில்லை. நாட்டில் பல ஆயுதக்குழுக்கள் இருக்கின்றன. தலைநகர் கொழும்பில் கூட கிரிமினல்கள், பாதாள உலகப் பேர்வழிகள் உள்ளனர். புலிகள், சிலரைக் கெரில்லாக்கள் என்கிறார்கள், சிலர், புலிகளைக் கெரில்லாக்கள் என்கிறார்கள்.

''புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் கருணா குழுவினரே புலிகளின் மீது தாக்குகிறார்கள்? கருணா குழுவினருக்கு இராணுவத்திலுள்ள எவரும் ஆதரவளிப்பதில்லை'' - என்றார் அவர் என 'றொயிட்டர்ஸ்' தெரிவித்தது. (ஐ-க)

## NOTICE

**Interview - Faculty of Graduate Studies**

The Interview for the post of **Visiting Lecturer in Education,** Which is Scheduled to be held on 27th March 2006, has been postponed due to unavoidable circumstances.

The new date Will be notified Later.

**Registrar**
**2006.03.23**

(C/48524)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பணிமனையின் சக உத்தியோகத்தர்

திருமதி **விஜயசுகுமாரி தங்கவேலு**

அவர்களின் அன்புத்தந்தை

**சின்னத்தம்பி கதிரேசு**

அவர்கள் இறைபதம் எய்தி 45ஆம் நாளான இன்று அவர்களின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

சுகாதார வைத்திய அதிகாரி
பணிமனை,
கோப்பாய்.
(48547)(30)

உத்தியோகத்தர்,
ஊழியர்கள்.

# மாரவில விபத்தில் தம்பதிகள் பலி

மாரவில ஹொரகல்ல பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்துச் சம் பவமொன்றில் தம்பதியினர் பரிதாபமான முறையில் உயிரிழந்தனர். கணவனும் மனைவியும் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது பின்னால் வந்த லொறியொன்று மோட்டார் சைக்கி ளில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது. இதனால் மோட்டார் சைக்கிள் தூக்கியெறி யப்பட்டதில் தம்பதியினர் அதே இடத்தில் உயிரிழந்தனர். மேற்படி லொறியின் சாரதியை கைது செய் துள்ள பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை நடத்திவருகின்றனர். (க-ஐ)


## மலேசியாவில்

**ஆண்களுக்கான உடனடி வேலை வாய்ப்புகள்**

- தொழிலாளர்கள் 50 பேர் தேவை
- சம்பளம் ரூபா. 25,000
- ஒரு மாதத்தில் பயணம்

மேலதிக விவரங்களுக்கு

**சுடர்ஒளி**

*மார்ச் 26 - ஏப்ரல் 1*
*பக்கம் 5ஐப் பார்க்கவும்*



## ஆஸ்திரேலியா — செல்ல விரும்புபவர்களுக்கு

ஆஸ்திரேலியாவில் உயர்கல்வி, குடிவரவு திறந்தொழிலாளர், மாணவர் விசா தொடர்பான ஆலோசனைகளுக்கு...

**தொடர்பு: 021 222 2478, 077 953 0496**

## IBMS

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

பிரிவு I : 25.03.2006 }
பிரிவு II : 27.03.2006 } காலை 10.00 மணி

| கற்கைநெறி | பயிற்சிக்கட்டணம் | |
|---|---|---|
| | முழுமையான கட்டணம் | சலுகைக் கட்டணம் |
| Dip. in Microsoft Office | ~~3000.00~~ | 500.00 |
| Dip. in Desk Top Publishing | ~~4000.00~~ | 500.00 |
| Dip. in Internet Technology | ~~4000.00~~ | 500.00 |
| Dip. in Hardware Eng. | ~~5000.00~~ | 1500.00 |

**Head Office : # 410, K.K.S. Road, Jaffna.**
**T.P. No. : 021 222 8232**

**Branches : • NMMV Road, Nelliady**
**• Sangaththanai,**
**- Chavakachcheri**

## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

**இன்று தொடக்கம்**

விஷால், மீராஜஸ்மின் நடித்த

**சண்டக் கோழி**

காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)
தினசரி நான்கு காட்சிகள்

## ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த

**மெர்க்குறிப் பூக்கள்**

காட்சி நேரம் மாற்றப்பட்டுள்ளது
10.30, 2.00, 6.00, 9.00, (பி.நே.) ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

## நாகம்ஸ் சுன்னாகம்

21 - 27 வரை

எம். ஜி. ஆர், ஜெயலலிதா நடித்த

**ஒளி விளக்கு**

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00


# மேலும் பல இடங்களில் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு அங்கீகாரம்

## மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, மார்ச் 25

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் காலி மாநகரசபை, வத்தேகம நகரசபை ஆகியவற்றுக்குப் போட்டியிட சுயேச்சைக் குழுக்கள் தாக்கல் செய்திருந்த மனுக்களும், கம்பஹா மாநகரசபை மற்றும் கொபேங்கனே பிரதேச சபை ஆகியவற்றுக்குப் போட்டியிட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் தாக்கல் செய்திருந்த மனுக்களும் நிராகரிக்கப்பட்டமை சட்டபூர்வமான தென்று மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்திருக்கின்றது.

கொழும்பு மாநாகரசபைத் தேர்தலுக்கான ஐக்கிய தேசியக் கட்சி வேட்புமனு நிராகரிப்பு தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று வழங்கிய அதே தீர்ப்பே மேற்படி குழுக்களுக்கும், கட்சிக்கும் வழங்கப் பட்டுள்ளது.

தமது மனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து இரு சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (க-ஐ)

# வறக்காபொல விபத்தில் கான்ஸ்டபிள் பலி

வறக்காப்பொலவில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்துச்சம்பவமொன்றில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்தார். மேலும் ஐந்து பேர் படுகாயமடைந்தனர்.

மூல்லேரியாவ பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் குடும்ப உறுப்பினர்கள் பயணித்துக்கொண்டிருந்த கார் வீதியை விட்டு விலகி பள்ளத்தில் பாய்ந்ததில் இந்த விபத்து நிகழ்ந்தது. விபத்தில் முல்லேரியா பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட அவரது குடும்ப உறுப்பினர்கள் நான்கு பேர் படுகாயமடைந்தனர். காரின் சாரதியாகக் கடமையாற்றிய பொலீஸ் கான்ஸ்டபிள் படுகாயங்களுக்குள்ளாகி அதே இடத்தில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வறக்காப்பொல பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (க-ஐ)

## மரண அறிவித்தல்கள்

### சின்னையா சற்குணநாதன்



மலேசியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தொண்டைமானாறை வதிவிடமாகக் கொண்டவரும் தொடர்ந்து கனடா ஒட்டாவாவில் தனது இறுதிக்காலம் வரை வாழ்ந்து வசித்தவருமாகிய சின்னையா சற்குணநாதன் (RETI- RED BUILDING FOREMAN - RAILWAY SRILANKA) கடந்த 21.03.2006 செவ்வாய்க்கிழமை கனடாவில் உள்ள ஒட்டாவாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் கதிரவேலு - மங்கையர்க்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதிதேவி (கனி)யின் ஆருயிர்க் கணவரும் நவரட்ணராஜா (மலேசியா), காலஞ்சென்ற செல்வரட்ணராஜா, சபாரட்ணம் (சிலாபம்), குணரட்ணம் (மானிப்பாய் - சுதுமலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கதிரேசநாதன் (கனடா - Civil Engineer ), வைத்தியநாதன் (கனடா), கணேசநாதன் (கனடா), லோகநாதன் (கனடா - Electrical Engineer), கமலநாதன் (கனடா - Computer Engineer) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வமலர் (கனடா), ஸ்ரீபவானி (கனடா), சிவாஜினி (கனடா), கேதாரணி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் துஸ்யந்தி (கனடா), ஆஷா (கனடா), கபிலன் (கனடா), மிதுஷா (கனடா), கஜன் (கனடா), அபிஷேக் (கனடா), தீபிகா (கனடா) ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் மோட்சம் **FUNERAL HOME** இல் **(42423, KINGSTON RD, TEL. 416- 2826999)** இலங்கை நேரப்படி இன்று (25.03.2006) சனிக்கிழமை காலை 5 மணியிலிருந்து இரவு 9 மணிவரையும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மீண்டும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை 26.03.2006 அன்று முற்பகல் 11 மணி தொடக்கம் ஒரு மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் அன்னாரின் இறுதிக்கிரியைகள் அதே மோட்ச மண்டபத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் **HIGHLAND MEMORY - GARDEN** இற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**சுதுமலை வடக்கு,**
**மானிப்பாய்.**
(48543)(30)

*தகவல்:*
*சி.குணரட்ணம்*
*(சகோதரன் - லக்கி கிறீம் ஹவுஸ்)*

### அமரர் ஆறுமுகம் இராசு



சூராவத்தையைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல கட்டட ஒப்பந்தகாரர் ஆறுமுகம் இராசு அவர்கள் நேற்றுமுன்தினம் (23.03.2006) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - நாகி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும் தங்கப்பிரகாசம், காலஞ்சென்ற மகாதேவன், மனோன்மணி, வாமதேவன், வசந்தராணி, லோகநாயகி (ஹொலண்ட்), சகாதேவன், வரதன் (சுவிஸ்), அரியமலர் (சுவிஸ்), கோடீஸ்வரன் (லண்டன்) ஆகியோரது அன்புத் தகப்பனாரும் வசந்தாதேவி, ஞானகி, காலஞ்சென்ற சுந்தரலிங்கம், கலாவதி, ஜெயக்கொடி, கருணேந்திரன் (ஹொலண்ட்), கெங்காதேவி, சுகிதா (சுவிஸ்), சத்தியநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2006) சனிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தொந்தனை, மல்லாகம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சாளம்பை**
**முருகன் கோவில் அருகில்,**
**மல்லாகம்.**
(48545)(30)

தகவல்:-
**இ.தங்கப்பிரகாசம்**
**(ஓய்வுபெற்ற தொழில்நுட்பவியலாளர், கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்).**

# இறுதி வெற்றியைத் தீர்மானிப்பது எங்களின் இராணுவ பலம்தான்!

## வடபோர்முனைத் தளபதி தீபன் தெரிவிப்பு



கிளிநொச்சி, மார்ச் 25

எங்கள் இறுதி வெற்றியைத் தீர்மானிக்கப்போவது எமது இராணுவ பலம்தான்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் வடபோர் முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன்.

இராணுவ சிறப்பு வேவுப்பிரிவு மாவீரர்கள் நினைவாக கட்டளைப் பணியகப் போராளிகளிடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியின் பரிசளிப்பு விழாவில் சிறப்புரையாற்றுகையில் கேணல் தீபன் இவ்வாறு தெரிவித்தார்.

பூநகரி முகாம் மீதான இரண்டாம் கட்ட வேவுப்பணியின் போது 10.03.1994 இல் வீரச்சாவடைந்த கப்டன் கந்தையா, கப்டன் கரிகாலன், கப்டன் ரகு உட்பட எட்டு மாவீரர்களின் நினைவு நாளையொட்டி இப் போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்நிகழ்வில் கேணல் தீபன் கூறியதாவது:-

அனைத்து வகையான சண்டைகளையும் நாங்கள் எதிர்கொள்ளக் கூடியவர்களாக மாற்றம் அடைவதன் மூலம்தான் நாம் அடுத்த கட்ட இறுதி இலக்கை வெல்ல முடியும். அதற்கு ஏற்றவகையில் நாம் எங்களைத் தயார்ப்படுத்த வேண்டும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்காக உயிர்துறந்த மாவீரர்களை நாம் நினைவில் கொண்டு எமது அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக நாம் தயாராக இருப்போம்.

ஏனென்றால் எங்கள் இறுதி வெற்றியைத் தீர்மானிக்கப்போவது எந்தப் பலமும் அல்ல. அது எங்கள் இராணுவ பலம்தான் என்றார் - தீபன்.

இராணுவ சிறப்பு வேவுப்பிரிவில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் நினைவாக கட்டளைப் பணியகப் போராளிகளுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு நிகழ்வு கடந்த புதன்கிழமை அன்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

கட்டளைப் பணியகப் போராளி புவியழகன் தலைமையில் மாலை 5 மணிக்கு நிகழ்வுகள் தொடங்கின.

பொதுச்சுடரினை கட்டளைத் தளபதிகளில் ஒருவரான வாகீசன் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை கட்டளைத் தளபதி கேணல் ஜெயம் ஏற்றினார்.

ஈகச்சுடரினை வரைபடப்பிரிவுப் பொறுப்பாளர் சசிகுமார் ஏற்றி வைக்க பொதுப் படத்திற்கான மலர்மாலையை கட்டளைத் தளபதி கேணல் தீபன் அணிவித்தார். (ஐ-190)

# திருமலையில் பூரண கதவடைப்பு

திருகோணமலை, மார்ச் 25

திருகோணமலையில் நேற்று பூரண கதவடைப்பு இடம்பெற்றது. இதனால் நகரத்திலும் அண்டிய பிரதேசங்களிலும் வழமை நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டது.

ஜெனீவா இணக்கப்பாட்டை முழு அளவில் நடைமுறைப்படுத்தக் கோரியும் -

புலிகளின் மூதூர் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் மீது கடந்த திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் ஸ்ரீலங்கா கடற்படை மேற்கொண்ட தாக்குதல்களைக் கண்டித்தும் -

யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்கு முரணாகப் பிறப்பிக்கப்பட்டுள்ள கடல்வலயத் தடையை நீக்கக் கோரியும்-

அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி அரசபடைகளும் ஒட்டுப்படைகளும் இணைந்து முகமூடியணிந்து நடத்திய அத்துமீறிய மனித உரிமை மீறல் நடவடிக்கையின் போது, வடக்கு - கிழக்குமாகாண சுகாதாரத் திணைக்களத்தின் கணக்காளர் திட்டமிட்ட அடிப்படையில் கைது செய்யப்பட்டமையைக் கண்டித்தும் -

திருகோணமலை ஸ்ரீலங்கா அரசின் நீதித்துறை அரச பயங்கரவாதத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமையைக் கண்டித்தும் -

ஊடகவியலாளர்களுக்கும் படுகொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்களின் பெற்றோர்களுக்கும் அரச பாதுகாப்பு படையினர் தொடர்ந்து கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றமையைக் கண்டித்தும் இந்தக் கடையடைப்புக்கு திருகோணமலை பொங்கு தமிழ் சமூகம் அழைப்பு விடுத்திருந்தனர்.

இதனால் நேற்று திருகோணமலை நகரில் வங்கிகள், வர்த்தக நிறுவனங்கள், மாகாண அமைச்சின் அலுவலகங்கள் பூரணமாக செயலிழந்தன. அரசசார்பற்ற நிறுவனங்களின் அலுவலகங்களும் கூட மூடப்பட்டு இருந்தன. பாடசாலைகள் ஆசிரியர்கள், மாணவர்கள் இன்றி வெறிச்சோடிக் கிடந்தன.

திருகோணமலையில் பொது வைத்திய சாலையில் வெளிநோயாளர் பிரிவு வெறிச்சோடிக் கிடந்தன.

நீதிமன்றங்களும் செயற்படவில்லை.

திருகோணமலை உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் நேற்றைய கதவடைப்பிற்கு ஆதரவு தெரிவித்து தமது தேர்தல் பிரசாரப் பணிகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தனர்.

இதேவேளையில் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார திணைக்களத்தின் கணக்காளரின் கைதைக் கண்டித்து வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அத்திணைக்களங்களின்கீழ் செயற்படும் ஊழியர்கள் நேற்று அடையாளப் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். (ஐ-க)

### அமைதி, பாதுகாப்பு, நட்புறவு: பாகிஸ்தானுக்கு மன்மோகன் அழைப்பு

அமிர்தசரஸ், மார்ச் 25

அமைதி, பாதுகாப்பு, நட்புறவு ஆகியவற்றுக்கு உத்தரவாதம் அளிக்கும் சமாதான ஒப்பந்தம் செய்துகொள்ளலாம் வாருங்கள் என்று பாகிஸ்தானுக்கு அழைப்பு விடுத்துள்ளார் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்.

பஞ்சாப் மாநிலத்தின் அமிர்தசரஸ் நகரிலிருந்து பாகிஸ்தானின் நான்கானா சாஹிப்புக்கு பஸ் சேவையை தொடங்கி வைத்துப் பேசுகையில் இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டார். வெள்ளிக்கிழமை தொடங்கிய இந்த நிகழ்ச்சியில் அவர் பஞ்சாபி மொழியிலேயே பேசினார்.

மன்மோகன் சிங்கின் இந்த அழைப்பை பாகிஸ்தான் வரவேற்றுள்ளது. (ஐ)

### ஐ.தே.க. வேட்புமனு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2004 ஜூன் மாதம் முதலாம் திகதியன்று 18 வயது நிரம்பாத சுபுன் லக்மால் என்ற இளைஞரின் பெயர் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பு மனுவில் உள்ளடக்கப்பட்டமை உள்ளூராட்சி சபைத்தேர்தல் சட்டத்தை மீறும் செயல் என்று மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஒட்டுமொத்த வேட்பு மனுவை நிராகரிப்பதைத் தவிர வேறு நடவடிக்கைகள் எடுப்பதற்கு தேர்தல் சட்டத்தின்படி அதிகாரம் இல்லையென்று தேர்தல் ஆணையாளர் சார்பில் ஆஜரான பிரதிச் சொலிஸிட்டர் ஜெனரல் சி.ஆர்.டி. சில்வா தெரிவித்த கூற்றை நீதிமன்றம் ஏற்றுக்கொள்வதாகவும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் தாக்கல் செய்திருந்த இந்த மனுவில் தேர்தல் ஆணையாளர், கொழும்பு மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி உட்பட 9 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர் என்பது தெரிந் ததே.

முன்னர் இந்த ரிட் மனுவை விசாரணைக்காக ஏற்றுக்கொண்டிருந்த நீதிமன்றம், அந்த மனு மீதான விசாரணை முடிவடையும் வரை கொழும்பு மாநகசபைக்கான தேர்தலை நடத்துவதை இடைநிறுத்தி இடைக்காலத் தடை உத்தரவு விதித்திருந்தது என்பது தெரிந்ததே.

நேற்று விசாரணை முடிந்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதால், ஐ.தே. கட்சியின் வேட்பு மனுவை நிராகரித்த நிலையில் தேர்தலை பிறிதொரு தினத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை தேர்தல் திணைக்களம் மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ-க)

### அரச கட்டுப்பாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாவது:-

யாழ்ப்பாணத்தில் ஒரு கல்வி வளாகத்தில் மாணவர்கள் கொடியை ஏற்றுவது இது மூன்றாவது நாளாகும்.

அப்போது நாம் அங்கு இருந்தோம். இது ஒரு போர்நிறுத்த மீறலாகும். அதாவது ஒரு போர்நிறுத்த உடன்படிக்கையின்படி புலிகளின் கொடியை அரச கட்டுப்பாட்டுப்பகுதியில் ஏற்றுவது தடுக்கப்பட்டுள்ளது என அவர்களுக்கு நாம் கூற முயற்சித்தோம். அதுவும் ஒரு கல்விக் கூடத்தில் இவ்வாறு செய்யவேண்டாம் எனக் கூறினோம். ஆனால் அதனையும் மீறி அங்கு மாணவர்கள் கொடியை ஏற்றினர். அதனை அடுத்து அங்கு இராணுவம் உள்ளே நுழைந்தது.

அந்தவேளை நாம் அங்கு இருந்ததால் நிலைமையைத் தணிக்க முடிந்தது.

அங்கு கடுமையான மோதல் இல்லை. மாணவர்கள் சில படங்களைப் பிடித்திருந்தனர். நாம் அதனைக் கைப்பற்றி யிருக்கின்றோம்.

நாம் அங்கு நிலைமை தீவிரமடைவதைத் தடுத்து விட்டோம். இனி இவ்வாறான பிரச்சினை அங்கு நடக்காது என நம்புகின்றோம். இது மிகவும் ஒரு கஷ்ரமானவிடயம். இவ்வாறு முன்பும் நடந்துள்ளது.

அங்கு இராணுவம் எப்படி நடந்தது எனவும் - மாணவர்கள் எப்படி செயற்பட முயன்றார்கள் எனவும் - எமக்குத் தெரியும். மாணவர்கள் கொடியை ஒரு மணிநேரம் ஏற்றி வைத்திருக்க முயற்சித்தார்கள்.

எப்படியிருந்த போதும் அரச கட்டுப்பாட்டுப்பகுதியில் இப்படியான கொடியை ஏற்றுவது நிச்சயமாகப் பிரச்சினையை உருவாக்கவே செய்யும்.

அங்குவாழும் மக்கள் தமிழ் பேசுபவர்கள். இராணுவத்தினர் சிங்கள பர்கள். ஆகவே இவ்வாறான ஒரு சூழலில் நிலைமை எவ்வாறாயினும் மோசமடையவே செய்யும். ஆகவே இவ்வாறான பதற்ற நிலைக்கு இடமளிக்கக் கூடாது - என்றார். (ஐ-12)

### மட்டக்களப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னரால் இக்குண்டுகள் செயலிழக்கச் செய்யப்பட்டன.

மாலை 5.45 மணியளவில் பொதுமக்களிடமிருந்து பொலீஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரிலே இக்குண்டுகள் கைப்பற்றப்பட்டன எனமட்டக்களப்பு தலைமையக பொலீஸ் பொறுப்பதிகாரி தெரிவித் தார்.

கைக்குண்டுகள் கைப்பற்றப்பட்ட வீட்டிற்கு அருகில் துணைப் படைவீரர் ஒருவரின் வீடு அமைந்துள்ளது எனவும் தெரிவிக்கப் படுகின்றது. (ஐ-க)

### யாழ். உயர்தொழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னால் மறைத்து மூடிக் கட்டியவாறு தொழில் நுட்ப நிறுவனத்துக்குள் திடீரென நுழைந்து நிறுவன இயக்குநரின் அறைக் கதவுகளையும் ஜன்னல்களையும் அடித்து நொறுக்கியுள்ளனர்.

காலை முதலே நிறுவன வளாகப் பகுதியில் நிறைந்திருந்த சீருடையினர் பின்னர் மெதுவாக வளாகத்தினுள் நுழைந்தனர். இதனைக் கண்டு பீதியடைந்த மாணவர்கள் தங்கள் வகுப்பறைகளில் இருந்தும் வெளியேறி பிரதான வகுப்பறையினுள் ஒன்று கூடினர். அச்சமயம் அங்கு வந்த சீருடையினர் பிரதான வகுப்பறையின் நான்கு புறமும் உள்ள ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொறுக்கினர் என்று கூறப்படுகிறது.

கைகளில் கொட்டான் பொல்லுகளை வைத்திருந்த படையினர் கதவுகளையும் சேதப்படுத்திக்கொண்டு உள்ளே நுழைந்து மாணவர்களைத் தேடித் தேடித் தாக்கினர் என்று கூறப்படுகிறது.

சில மாணவர்கள் சப்பாத்துக் கால்களால் உதைக்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சமயத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அங்கு பிரசன்னமாகினர்.

மாணவர்கள் சீருடையினரால் தாக்கப்படுவதை அங்கு காணப்பட்ட படப்பிடிப்பாளர்கள் ஒளிப்பதிவு செய்தனர். அவ்வாறு ஒளிப்பதிவு செய்த கருவிகளை தம்மிடம் ஒப்படைக்குமாறு சீருடையினர் வற்புறுத்தினர் எனவும் கூறப்படுகிறது.

சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தவேண்டாம் என்று கண்காணிப்புக் குழுவினர் கேட்டுக்கொண்டபோதிலும் சீருடையினர் அதனைச் செவிமடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் கண்காணிப்புக் குழுவினரும் படை அதிகாரிகளும் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றாமல் நிகழ்ச்சிகளை நடத்துமாறு மாணவர்களிடம் கேட்டுக்கொண்டனர்.

நேற்றைய அசம்பாவிதங்கள் இடம்பெற்ற சமயம் பொலீஸாரும் அப்பகுதியில் காணப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

சீருடையினரின் தாக்குதல்களின்போது மாணவர்கள் சிலரது கைத்தொலைபேசிகள் காணாமற்போயின மோட்டார் சைக்கிள்களுக்கும் சேதங்கள் ஏற்பட்டன.

உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் இடம்பெற்ற இந்த அடாவடித்தனமான சம்பவம் பற்றிய தகவல் கொழும்பில் உள்ள உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்குப் பொறுப்பான அமைச்சுக்கு உடனடியாகத் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பான முழுமையான அறிக்கையை அந்த அமைச்சு கோரியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

உயர்தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்துக்குள் சீருடையினர் புகுந்து நடத்திய தாக்குதல் குறித்து மாணவர் அமைப்புகள் கண்டன அறிக்கைகளை விடுத்துள்ளன.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம், உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம், தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் என்பனவும் கண்டன அறிக்கைகளை விடுத்துள்ளன. (ஐ-எ-13)

### அரச ஒடுக்குமுறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குக் கொண்டுவரலாம் என்ற நோகத்திலேயே பேச்சுகளில் பங்குகொண்டோம். ஆனால், ஸ்ரீலங்கா அரசும் அதன் படைகளும் அப்படிச் செயற்படாமல் தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாக ஒடுக்குமுறைகளை மேற்கொண்டுவருகின்றன.

இதனால், நாம் பொறுமையின் எல்லைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

அமைதி வழியில் தீர்வு காணலாம் என்றுதான் ஸ்ரீலங்கா அரசாங்கத்துடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டோம்.

இதன்மூலம் போரை நிறுத்துவது மட்டுமல்ல - தமிழர் தாயகத்தில் ஆக்கிரமித்து நிற்கும் சிறிலங்கா அரச படைகளை படிப்படியாக விலக்கி இடம்பெயர்ந்த எமது தமிழ் மக்களை சொந்த இடங்களில் குடியமர்த்தலாம் என்று எண்ணினோம். ஆனால், அரச படைகள் இதனைக் கவனத்தில் எடுக்கவில்லை.

இதனால், ஸ்ரீலங்கா அரசு மீதான நம்பிக்கையை நாம் இழந்துவிட்டு பொறுமையின் எல்லையில் நின்றோம் - என்று தனது உரையில் குறிப்பிட்டார் தமிழ்ச்செல்வன். (ஐ)


**SKY COMPUTERS (PVT) LTD.**
Affiliated with Irish International University (U.K)
No. 89, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel: 021 - 4590325 : Fax: 021 - 4590325

- MS OFFICE - 3 MONTHS
- MS-WORD - 1 MONTH
- MS-EXCEL - 1 MONTH
- MS-ACCESS - 1 MONTH
- MS-POWER POINT - 1 MONTH

MS- Office 2000/=

INTERNET E-MAIL

- DESK TOP PUBLISHING - 3 MONTHS
- ADOBE PHOTOSHOP - 1 MONTH
- ADOBE PAGEMAKER - 1 MONTH
- CORELDRAW - 1 MONTH

COMPUTERSED ACCONDING HARD WARE TECHNOLOGY 3 MONTHS

KIDs PROGRAM சிறுவர்களுக்கான பயிற்சி நெறி
அனைத்துப் பாடத்திட்டத்திற்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. உடன் விரையுங்கள்
E-mail : skycom@WOW.lk
(கச்சேரிக்கு அருகில்)
Today you learn Tomorrow you lead

**அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**
நியூட்டன் (D.C.S) ஆரியகுளம் சந்தி
அருகாமை யாழ்.நகர்
சனி, ஞாயிறு 9-12 a.m.
திகழ் கல்வி நிறுவனம் K.K.S. வீதி இணுவில்
சனி, ஞாயிறு 3 - 6 p.m.
திங்கள், புதன் 4 - 6 p.m.
ஆரம்பம்: 25.03.2006 சனி காலை
யாழ்.நகர்: 9 மணி. இணுவில் 3 மணி.

**On - Line Classes**
எமது நிறுவனத்தில் D.T.P கற்கை நெறியானது On - Line மூலமாக நடைபெறுகின்றது.

| Subjects | Duration | Fees |
|---|---|---|
| Page Maker -7.0 | 20 hours | 1000/= |
| Coreldraw -12 | 20 hours | 1000/= |
| Photoshop -7.0 | 20 hours | 1000/= |

- நீங்கள் விரும்பிய நேரத்தில் கற்கலாம்
- இக்கற்கை நெறிக்குப் பதிவுக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.
- Theory, Practical Books வழங்கப்படும்

**C.B Computer Academy**
T.P No. 021-4590291 Station Road, Kondavil.

**காணி விற்பனைக்கு**
கொக்குவில் செம்பியன் வீதி, நந்தாவில் ஒழுங்கையில் கே.கே.எஸ் வீதி மற்றும் மாத்தனை முருகன் கோயில் ஆகியவற்றிற்கு 100 மீற்றர் தூரத்தில் 3 3/4 பரப்பு சதுரக்காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
077 6132461, 0714115002.
(அ-48512) (54-17-34)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.03.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.